Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2027 மார்கழி 04 வியாழக்கிழமை (19-12-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 23

# தற்கொலைத் தாக்குதல் இலக்குடன் 25 பேர் கொழும்புக்குள் ஊடுருவல்!

## கிழக்குச் சம்பவத்தை அடுத்து தலைநகரில் கடும் பாதுகாப்பு

கொழும்பு, டிசம்பர் 19

தற்கொலைத் தாக்குதல்களை நடத்தும் நோக்கத்துடன் இருபத்தைந்து கரும்புலிகள் தலைநகர் கொழும்புக்குள் ஊடுருவி இருப்பதாகத் தகவல் வெளியாகியிருப்பதைத் தொடர்ந்து அங்கு கடும் பாதுகாப்பு ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றன.

களுவாஞ்சிக்குடியில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் நடத்திய தற்கொலைத் தாக்குதலில் விசேட அதிரடிப்படையின் பிரதிக் கட்டளை அதிகாரியான சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் உபாலி சஹபந்து கொல்லப்பட்ட சம்பவத்தை அடுத்தே தலைநகரில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டிருக்கின்றன.

தற்கொலைத் தாக்குதல் நடத்தும் நோக்குடன் சுமார் 25 கரும் புலிகள் கொழும்புக்குள் ஊடுருவியிருப்பது பற்றிய தகவலை பிரதிப் பொலீஸ்மா அதிபர் டி. பி. திஸநாயக்கா நேற்று தெரிவித்தார்.

பாதுகாப்பு முன்னேற்பாடாக கொழும்பு நகரில் வாகனங்கள் ஆங்காங்கே நிறுத்தப்படுவதற்கும் கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

கொழும்பு நகர் முழுவதும் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டிருப்பதாக கொழும்பு செய்தி வட்டாரங்களும் தகவல் வெளியிட்டன. (உ-10)

## களுவாஞ்சிக்குடித் தாக்குதல்: படை வட்டாரங்கள் அதிர்ச்சி!

கொழும்பு, டிச. 19

களுவாஞ்சிக் குடியருகே நேற்றுமுன்தினம் விடுதலைப் புலிகள் நடத்திய தற்கொலை தாக்குதலில் விசேட அதிரடிப் படையின் சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் உபாலி சஹபந்து (வயது 54) கொல்லப்பட்ட சம்பவம் பாதுகாப்பு வட்டாரங்களை அதிர்ச்சியடைய வைத்திருப்பதாகச் செய்தி ஏஜென்ஸி ஒன்று குறிப்பிட்டது.

இந்தச் சம்பவம் குறித்து விசேட விசாரணை ஒன்று நடத்துவதற்கும் உத்தரவிடப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

கிழக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து விசேட கொமாண்டோப் படைப் பிரிவுகளுக்கும் இந்த அதிகாரியே கட்டளை பிறப்பித்து வந்துள்ளார்.

தற்கொலைப் படைப் போராளி இவ்வளவு துல்லியமாக சஹபந்துவின் ஜீப்பை நெருங்கும் வரை அவரது பாதுகாப்பிற்காக முன்னும் பின்னும் சென்று கொண்டிருந்த வாகனங்கள் என்ன செய்தன என்ற கேள்வி தற்போது எழுப்பப்பட்டுள்ளது. பாதுகாப்பு ஏற்பாடுகளில் ஏதேனும் குறைபாடு இருந்ததா என்பதை அறிய சிறப்பு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

முக்கிய படை அதிகாரி ஒருவர் ஜீப்பில் சென்று கொண்டிருக்கும் சமயம் மோட்டார் சைக்கிளில் வந்த கரும்புலி வீரர் ஜீப்புடன் நேருக்கு நேர்

(8 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



பனையிலை தேள் கொட்ட தென்னையிலை நெறி கட்டின கதை மாதிரி எல்லோ உது கிடக்குது......!

## குளத்தினுள் கண்ணி! 8 படையினர் மரணம்!!

வெலிஓயா ஜானகபுர பகுதியில் குளம் ஒன்றுக்குள் நீருக்கடியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கண்ணிவெடி வெடித்ததில் எட்டு இராணுவத்தினர் உயிரிழந்தனர்; மற்றும் இருவர் படுகாயமடைந்தனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் 2-30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் கொழும்பில் தகவல் வெளியிட்டன.

சம்பவம் நடைபெற்ற இடத்திலேயே ஆறு படையினர் கொல்லப்பட்டனர். காயமடைந்த நால்வரில் ஒருவர் அநுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்படும் வழியிலும் மற்றும் ஒருவர் ஆஸ்பத்திரியிலும் உயிரிழந்தனர். (உ-3-10)

## செய்திச் சாரம்

### திருமலை சந்தை நேற்றும் கூடவில்லை

கொழும்பு, டிச. 19

திருமலை நகரச் சந்தை நேற்று 2 ஆவது நாளாக கூடவில்லை.

சந்தைக் குத்தகையை புளொட் அமைப்பைச் சேர்ந்தவர் என்று கூறப்படும் ஒருவர் அதிக தொகைக்கு எடுத்ததாகத் தெரிவிக்கப்பட்டதை அடுத்து எழுந்த சர்ச்சை காரணமாக சந்தை நடவடிக்கைகளை வர்த்தகர்கள் புறக்கணித்து வருவது தெரிந்ததே. (உ-3-150)

### படையினர் சிலர் உயிருடன் பிடிபட்டனர்?

கொழும்பு, டிச. 19

புளுக்குனாவ விசேட அதிரடிப் படைத் தாக்குதலின் போது அதிரடிப் படையினர் சிலரைப் புலிகள் உயிருடன் பிடித்துச் சென்றுள்ளமை அவர்களின் வானொலித் தொடர்புகளைக் கேட்டபோது தெரியவந்ததாகப் பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்தது. (உ-3)

### ஜனவரியில் செயலணிக்குழு பணிமனை திறப்பு

கொழும்பு, டிச. 19

மனித உரிமைகள் செயலணிக்குழு அதன் யாழ்ப்பாணக் கிளையை ஜனவரி நடுப்பகுதியில் திறந்து வைக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாண செயலகத்துக்கு சமீபமாக புதிய அலுவலகத்துக்கு என ஓரிடத்தை செயலணிக்குழு தெரிவு செய்துள்ளது. [உ-3]

### ஊரடங்கு நேரத்தில் மாற்றமில்லை

யாழ்ப்பாணம், டிச. 19

தீவுப்பகுதியில் உள்ள மக்கள் அதிகாலை வேளையில் திருவெம்பாவைப் பூசைக்குச் செல்ல வசதியாக திருவெம்பாவைக் காலத்தில் காரைநகர், எழுவைதீவு, அனலைதீவு போன்ற பகுதிகளில்

(8 ஆம் பக்கம் பார்க்க)

### சிறையிலும் ஜெயலலிதா விசாரணையில்!

சென்னை, டிச. 19

சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள தமிழக முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவை டான்ஸி நிலப் பேர ஊழல் தொடர்பாக இன்று சிறைச்சாலையில் வைத்து லஞ்ச ஒழிப்புத்துறையினர் விசாரணை நடத்துவதற்கு சென்னை நீதிமன்றம் அனுமதி அளித்தது.

சுகவீனம் காரணமாக அரசுப் பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள அவரது தோழி சசிகலாவை ஆஸ்பத்திரியில் வைத்து விசாரணை செய்யவும் நீதிமன்றம் அனுமதி வழங்கியது. (உ)

### அன்னை திரேஸா வீடு திரும்புவார்

கல்கத்தா, டிச. 19

சுகவீனம் காரணமாக கல்கத்தா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள அன்னை திரேஸாவின் உடல் நிலை தேறி வருவதை அடுத்து அவர் நாளை ஆஸ்பத்திரியிலிருந்து தமது இல்லத்துக்குத் திரும்புவார் என ஆஸ்பத்திரி வட்டாரங்கள் நேற்று மாலை தெரிவித்தன. (உ)

### செங்கலடியில் சூட்டுச் சம்பவம்

கொழும்பு, டிச. 19

மட்டக்களப்பு செங்கலடிப் பகுதியில் நேற்று விடுதலைப் புலிகள் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் ரெலோ உறுப்பினர் ஒருவர் காயமடைந்தார். அவர் செங்கலடி ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-10)

### திருமலையில் விசேட பரீட்சை

கொழும்பு, டிச. 19

பரீட்சை மேற்பார்வையாளர்களாகப் பணியாற்ற வேண்டிய அதிகாரிகளின் பகிஷ்கரிப்புக் காரணமாக திருகோணமலை மாவட்டத்

( 8ஆம் பக்கம் பார்க்க)

### கோப்ரல் சுட்டுக்கொலை

திருகோணமலை, டிச. 19

திருகோணமலை நிலாவெளி இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவக் கோப்ரல் ஒருவர் விடுதலைப் புலிகளால் நேற்று மாலை சுட்டுக் கொல்லப்பட்டார்.

அப்பகுதியில் பாதுகாப்புப் படையின் உளவாளி ஒருவரும் நேற்று சுட்டுக் கொல்லப்பட்டார். அதுபற்றிய செய்தி 7 ஆம் பக்கத்தில். (உ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA.

## TENDER NOTICE

Sealed tenders will be received by me upto 10-00 a.m. on 1997-01-08 from contractors registered for Civil Engineering works with ICTAD for the Repairs/ Maintenance/ Improvements at Ramanathan Academy of Fine Arts, Maruthanamadam.

Tender forms may be obtained from the Works Engineer (civil), University of Jaffna until 31-12-1996 on producing Registration books and cash payment of the following tender fees at the Shroff's counter:

1. Refundable Deposit — Rs. 3,750/-
2. Non-refundable Deposit — Rs. 250/-

Tender forms may be seen by the tenderers at the Maintenance Branch of this University during office hours, if necessary.

**- Registrar**

University of Jaffna,
P.O.Box 57,
Thirunelvely,
Jaffna.

(C/3757)

# கண்ணீர் அஞ்சலி

## செல்வன் அருந்தவராஜா கிருஷ்ணா

(பிரிவு அத்தியட்சகர், சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படை)

ஐக்கிய வலிகாமம் வடக்கு சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவில் பதின்மூன்று வருட தொடர் சேவை ஆற்றியவரும், காலத்தின் தேவைக்கு தன்னலம் கருதாது பல மைல்கள் துவிச்சக்கர வண்டியில் சென்று சேவையாற்றியவரும், க. அருந்தவராஜா (சென்ஜோன்ஸ் அம்புலன்ஸின் பிரதேச ஆணையாளர்) அவர்களின் கனிஷ்ட புதல்வனும், வன்னி மாநிலத்தில் முதலுதவி அறிவு போதிக்க அரும்பாடு பட்டவருமான செல்வன் **அ. கிருஷ்ணா** இன்று எம்மை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு அகால மரணம் அடைந்துள்ளார். அவர் மறைவையொட்டி துயரடைந்திருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**வலி. வடக்கு**
**சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையினர்.**

(44213)

# கண்ணீர் அஞ்சலி

## திரு. வி. எஸ். குணசிங்கம்

(முன்னாள் நிர்வாகச் செயலாளர்,
கூ. ஊ. தொழிற் சங்கம், யாழ்ப்பாணம்)

தொழிற்சங்கம் ஒன்று கூட்டுறவு ஊழியர்க்காய்
நாம் அமைத்து
தொழிலாளர் குறை தீர்க்க தொடங்கிய நோக்கமதை
தொய்யவிடாது துடிப்புடன் நிறைவேற்ற
தொலை நோக்குடனும், துணிவுடனும் செயற்பட்டு
தொழிலாள வர்க்கத்திற்கு வெற்றி பல பெற்றுத்தந்த
தோழர் வி. எஸ். குணசிங்கம் தோற்றுவிட்டார்
யமதூதனிடம்.

எமது தொழிற்சங்க முன்னாள் நிர்வாகச் செயலாளர் **வி. எஸ். குணசிங்கம்** அவர்கள் 16 - 12 - 96 அன்று இயற்கை எய்தியதனால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

**கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கம்,**
**யாழ்ப்பாணம்.**

(44212)

# கண்ணீர் அஞ்சலி

## திரு. சி. வ. வைத்திலிங்கம்.

(சாவகச்சேரி ப. நோ. கூ. சங்க முன்னாள் தலைவர், யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை முன்னாள் உப தலைவர், இளைப்பாறிய கனிஷ்ட அதிபர். யா/டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி.)

17 - 12 - 1996 இல் காலமான கூட்டுறவாளர்,
கல்விமான் **அமரர் சி. வ. வைத்திலிங்கம்**

அவர்களின் மறைவையொட்டி துயரடைந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கும், கூட்டுறவாளர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

**தலைவர், பணிப்பாளர், பணியாளர்.**
**தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம்.**

மல்லாகம்.
18 - 12 - 1996 (சி-3755)

# சமய சந்நிதிகளில்

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப்பெருமாள் ஆலயத்தில் நாளை சுவர்க்க வாசல் ஏகாதசி திருவிழா நடைபெறும்.

நாளை மறுதினம் சனிக்கிழமை விசேட அபிஷேக பூசைகளுடன் இம்மாதம் 12 ஆம் திகதி ஆரம்பமாகிய ஏகாதசி மகோற்சவம் நிறைவுறும். (அ-30)

★ ★ ★

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ வல்லிபுரநாதர் ஆலயத்தில் சுவர்க்கவாசல் ஏகாதசியை ஒட்டி அபிஷேக ஆராதனைகள் நாளை பி.ப. 3 மணிக்கு ஆரம்பமாகும். அன்றிரவு நித்திரை விழித்தலும் சனிக்கிழமை காலை சுவாதசி உற்சவமும் இடம்பெறும்.

(அ-30)

★ ★ ★

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் வெள்ளிதோறும் நடைபெறும் சமய நிகழ்வுகளில்— நாளை முற்பகல் 10.00 மணிக்கு ''காணும் இடமெல்லாம் உந்தன் காட்சி தெரியுதடி'' என்னும் பொருளில் ஆசிரியர் ஐ. சண்முகலிங்கம் சமயச்சொற்பொழிவு நிகழ்த்துவார். [அ]

★ ★ ★

யாழ்ப்பாணம், ஸ்ரீ சத்திய சாயி சேவா சமித்தி நிலையத்தில் ஸ்ரீமத் பாகவத படனம் நேற்றுக் காலையில் ஆரம்பமானது.

இப் படனம் தொடர்ந்து ஏழு நாள்களுக்கு நடைபெற்று இம்மாதம் 27 ஆம் திகதி பூர்த்தி விழா நடைபெறும். [அ]

## கப்பலில் இலவச பாடநூல்

கொழும்பு, டிச. 19

வடபகுதி மாணவருக்குத் தேவையான — 1997 ஆம் ஆண்டுக்குரிய — இலவசப் பாடநூல்கள் கப்பல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகக் கொழும்பில் தெரிவிக்கப்பட்டது. (உ-5)

## முத்தமிழ் விழா

மானிப்பாய், டிச. 19

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி ஆரம்ப பாடசாலையின் முத்தமிழ் விழா இன்று மு. ப. 9 மணிக்கு அதிபர் வே. சிவானந்தன் தலைமையில் நடைபெறும்.

சங்கானை கோட்டக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகவும், கல்லூரி அதிபர் ச. இராமலிங்கம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். [அ-90]

## ஆண்டு 9 மாணவருக்கு பரீட்சை

யாழ்ப்பாணம், டிச. 19

இவ் வருடம் ஒன்பதாம் ஆண்டில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான கனிஷ்ட தொழில் நுட்பச் சான்றிதழ் பரீட்சை நாளை மறுதினம் நாடு முழுவதிலும் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்கு சுமார் மூன்றரை லட்சம் மாணவர்கள் தோற்றவுள்ளனர். பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

இப்பரீட்சைக்குத் தோற்றும் தமது பாடசாலைகளின் ஆண்டு 9 மாணவர்களை நாளை காலை பாடசாலைக்குச் சமுகம் தந்து சுட்டிலக்கங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு யாழ். இந்துக் கல்லூரி அதிபர்கள் கேட்டுள்ளனர். (உ-3-152)

# கண்ணீர் அஞ்சலி

## இராசையா இராசம்மா

நெல்லியடியைச் சேர்ந்த திருமதி இராசையா இராசம்மா அவர்கள் 18 - 12 - 1996 அன்று இறையடி சேர்ந்துள்ளார்.

அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**து. கனகம்மா**
**து. சீலன்**

கரவெட்டி. (சி/ 3758)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சிவக்கொழுந்து இராசதுரை

திருமதி சிவக்கொழுந்து இராசதுரை 18 - 12 - 96 அன்று அதிகாலை காலமானார்.

இவர் இந்துக் கல்லூரி வீதி, பண்டத்தரிப்பைச் சேர்ந்த வயிரமுத்து — சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், ஏழாலை கிழக்கு செல்லையா இராசதுரையின் (இளைப்பாறிய இ. போ. ச. சாரதி) அன்பு மனைவியும், குணேஸ்வரி (றதி), பத்மலோசினி (றஞ்சி — உதயன் பணிமனை), கோகுலதாசன் (லவன்) ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

இறுதிச் சடங்குகள் இன்று 19 - 12 - 96 பகல் 12.00 மணிக்கு இந்துக் கல்லூரி வீதி, பண்டத்தரிப்பில் நடைபெறும்.

தகவல்:
**பத்மலோசினி**
(மகள்)

இந்துக் கல்லூரி வீதி,
பண்டத்தரிப்பு. (சி/ 3752)

## செல்வி செல்வநாயகம் அருமைநாயகி

கொக்குவிலைச் சேர்ந்தவரான செல்வி செல்வநாயகம் அருமைநாயகி 18-12-96 இல் காலமானார்.

அன்னார் செல்வநாயகம் – பரிபூரணம் தம்பதிகளின் அன்பு மகளும், விமலநாயகி, யோகேஸ்வரன், ஸ்ரீலோகநாயகி, ஸ்ரீலோகநாதன் (ஆசிரியர், சென் பற்றிக்ஸ் கல்லூரி), கெங்கநாயகி ஆகியோரின் சகோதரியும், செல்வரஞ்சி, வசந்தகுலமணி ஆகியோரின் மைத்துனியும், சோபிதன், டிலக்ஸன், வித்தகன் ஆகியோரின் பெரிய மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று நண்பகல் 12 00 மணிக்கு நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்;
**ஸ்ரீ லோகநாதன்,**
**யோகேஸ்வரன்.**

அச்சுக்கூட ஒழுங்கை,
கொக்குவில். (44215)

## திருமதி சவுந்தரம்மா மயில்வாகனம்

டச்சு வீதி, உடுவிலைச் சேர்ந்த திருமதி சவுந்தரம்மா மயில்வாகனம் அக்கராயன் குளத்தில் 7-12-96 அன்று காலமானார். அன்னார் காலஞ் சென்ற மயில்வாகனத்தின் அன்பு மனைவியும், காலஞ் சென்ற சிவகாமசுந்தரி மற்றும் புஸ்பம் [கனடா], சண்முகநாதன் (அக்கராயன் குளம்), நேசமலர் (கனடா), பரஞ்சோதிமலர் (கொழும்பு), சிவசோதிமலர், ரோகினிதேவி (குருநாகல்), பரமநாதன், ஜெகநாதன் (கனடா), பத்மாவதி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம், கிளி, சண்முகராஜா (கனடா), சிவயோகநாதன் (Mascons, Colombo), தங்கராஜா (முருகன் மோட்டோர்ஸ், யாழ்.), ஜினதாசா (குருநாகல்), சரோஜினிதேவி, உஷா (கனடா), துரைநாயகி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அக்கராயன் குளத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**தி. தங்கராஜா**

88/5, கோயில் வீதி,
யாழ்ப்பாணம். (44204)

## திருமதி நாகலிங்கம் சுபத்திராதேவி

பருத்தித்துறை, ஐயனார் வீதியைச் சேர்ந்த திருமதி நாகலிங்கம் சுபத்திராதேவி 16 - 12 - 1996 திங்கட்கிழமை காலமானார்.

இவர் நடராஜா நாகலிங்கம் (ஓய்வுபெற்ற தபால் அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நடராஜா, சின்னராஜா மற்றும் நந்தகோபாலன் (செம்மலை), சத்தியபாமா (செம்மலை) ஆகியோரது அன்புச் சகோதரியும், தவமணிதேவி (புவியியல்துறை, யாழ். பல்கலைக்கழகம்), ருக்மணிதேவி, நந்தகுமார் (கனடா) ஆகியோரது அன்புத் தாயாரும், ஸ்ரீதரன் (தாபனக்கிளை, யாழ். பல்கலைக்கழகம்) அவர்களது அன்பு மாமியாரும், அம்பிகா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), பிரியதர்ஷன் ஆகியோரது அன்புப் பேர்த்தியாருமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் 17 - 12 - 1996 அன்று பருத்தித்துறையில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி தயவாகக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
**வ. ஸ்ரீதரன்** (மருமகன்)

ஐயனார் வீதி,
பருத்தித்துறை. (44214)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்
...லார் இளைநூலகம்.

# யூதக் குடியிருப்புகள் குறித்து ஐ. நா. விளக்கம் கேட்கிறது

நியூயோர்க், டிச. 19

இஸ்ரேலின் யூதக் குடியேற்றக் கொள்கை குறித்து விளக்கம் அளிக்குமாறு இஸ்ரேல் தூதருக்கு ஐ. நா. பாதுகாப்புச்சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

புதிய யூதக் குடியேற்றங்களுக்கு வரிச்சலுகை வழங்குவதென்ற இஸ்ரேலின் முடிவு பாதுகாப்புச்சபை உறுப்பினர்களிடையே கவலையை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்விடயம் தொடர்பாக இஸ்ரேல் அளிக்கும் விளக்கம் மன நிறைவை அளிக்காவிடின் மேல் நடவடிக்கை எடுப்பது குறித்து பாதுகாப்புச்சபை பரிசீலிக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இஸ்ரேலின் புதிய அரசாங்கம் மேற்குக் கரையில் உள்ள யூதக் குடியிருப்புக்கள் குறித்து விட்டுக்கொடுக்காத கொள்கையைக் கடைப் பிடிபதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-10)

## பாப்பரசர் - அரபாத் இன்று சந்திப்பு!

திருத்தந்தை 2-வது அருள். சின்னப்பருக்கும் பலஸ்தீன அரசுத்தலைவர் யசீர் அரபாத்துக்குமிடையே இன்று இடம் பெறும் சந்திப்பில் மத்திய கிழக்கு பிரச்சினை விவாதிக்கப்படும் என நம்பப்படுகிறது.

அமைதி நடவடிக்கைகளுக்கு மீண்டும் உயிர் கொடுக்கும் அவசர தேவையை முன்னிட்டு யசீர் அரபாத் திருத்தந்தையை சந்திக்கவுள்ளதாக பலஸ்தீனப் பிரதிநிதிகள் குழு வெளியிட்ட அறிக்கை தெரிவிக்கிறது.

1982 ஆண்டுக்குப் பின்னர் யசீர் அரபாத் திருத்தந்தையை சந்திப்பது இது நான்காவது தடவையாகும். (இ-10)

## உலக அமைதித் தினமாக 97 ஜனவரி - 1 பிரகடனம்

வத்திக்கான், டிச. 19

1997 ஜனவரி முதலாம் திகதியை உலக அமைதித் தினமாக கத்தோலிக்க திருச்சபையின் தலைமைப் பீடம் பிரகடனப்படுத்தியுள்ளது.

இந்த நாளில் மன்னிப்பிலும் நீதியிலும் மலரும் புதிய சமுதாயம் எழ திருத்தந்தை இரண்டாம் அருள். சின்னப்பர் அழைப்பு விடுத்துள்ளார்.

அவரது அந்த அழைப்புச் செய்தி உலகில் உள்ள அனைத்துக் கத்தோலிக்க தேவாலயங்களிலும் அன்றைய தினம் படிக்கப்படும்.

நேற்று அதிகாலை அந்த அழைப்பின் நகல் உலக மக்களுக்கு வெளியிடப்பட்டது.

அதில் அநியாயமான யுத்தங்களுக்கு எதிராக இணைந்து குரல் எழுப்பவும், அப்படி குரல் எழுப்புவதால் வரும் இன்னல்களை ஏற்றுக் கொள்ளவும் எல்லா மதத்தவர்களும், மத அமைப்புகளும் ஒன்றிணைந்து வர வேண்டும் எனத் திருத்தந்தை கேட்டுள்ளார். (இ-10)

## திருமணம் செய்ய வரி

சீனாவில் திருமணம் செய்வதாயின் அரசுக்கு சிறப்பு வரி செலுத்த வேண்டும். இது ''திருமண வரி'' என அழைக்கப்படுகிறது.

இந்தத் திருமண வரியினைச் செலுத்த முடியாத காரணத்தினால் மக்கள் அதிகார பூர்வமாகப் பதிவு செய்யாமலே இணைந்து வாழ்கின்றனர். சமான் மாகாணத்தில் மட்டும் இப்படி இணைந்து வாழும் தம்பதிகள் சுமார் 5 லட்சத்திற்கு மேல் உள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (உ-10)

## பூட்ரஸ் பூட்ரஸ் காலிக்கு ஐ. நா. பொதுச்சபை புகழாரம்

நியூயோர்க், டிச. 19

கடந்த நான்கு ஆண்டுகளாக ஐ. நா. சபையின் செயலாளராகப் பணியாற்றிய பொதுச் செயலர் பூட்ரஸ் பூட்ரஸ்காலிக்கு பொதுச் சபை புகழாரம் செலுத்தி உள்ளது.

அத்தோடு நில்லாமல் அவரது சாதனைகளைப் பட்டியலிட்டு பாராட்டித் தீர்மானமும் நிறைவேற்றியது.

கொபி அனானைப் புதிய பொதுச் செயலாளராகப் பொதுச் சபை நேற்று ஏற்றுக் கொண்டது.

இம்மாதம் 31ஆம் திகதி உத்தியோகபூர்வமாக அவர் ஐ. நா. செயலர் பதவியைப் பொறுப்பேற்பார்.

பூட்ரஸ் பூட்ரஸ் காலி பொதுச் செயலர் பதவிக்கு மீண்டும் போட்டியிட முயன்றதும், அமெரிக்கா தனது ''வீட்டோ'' அதிகாரத்தைப் பயன்படுத்தி அதனைத் தடுத்து நிறுத்தியதும் தெரிந்ததே. (இ-10)

## உலக அரங்கில்

## ரூ. 1,500 கோடிக்கும் அதிக ஊழலில் ஜெயலலிதா சம்பந்தம்

இந்தியாவின் ''இமெல்டப மார்கோஸ்'' என வர்ணிக்கப்படும் முன்னாள் தமிழக முதல்வர் ஜெயலலிதா இந்த ஜென்மத்தில் தப்ப முடியாத அளவுக்கு ஊழல் தொடர்பான ஆதாரங்கள் அவரது ''போயர்ஸ் தோட்ட'' வீட்டில் கண்டெடுக்கப்பட்டதாக கண்காணிப்பு மற்றும் ஊழல் தடுப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

போயர்ஸ் தோட்ட வீடு மற்றும் ஹைதரபாத் பண்ணை வீடு ஆகியவற்றில் கைப்பற்றப்பட்ட தங்கம், வெள்ளிப் பொருள்களின் புகைப்படங்கள் மற்றும் வீடியோ படங்களையும் அதிகாரிகள் நேற்று முன்தினம் வெளியிட்டனர்.

ஆயிரத்து ஐந்நூறு கோடிக்கு மேல் ஊழல் இடம் பெற்றதற்கான ஆதாரங்கள் சிக்கியுள்ளன என்று ரகசியத் தகவல்கள் தெரிவிப்பதாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது. (இ-10)

## மாநாடு ஆரம்பம்

குழந்தைகள் — சிறுவர்கள் தொழில் குறித்த தெற்காசிய நாடுகளின் மாநாடு நேற்று முன்தினம் புதுடில்லியில் ஆரம்பமானது.

குழந்தைத் தொழில் கொடுமையை அனுபவித்த ஏழு வயதுச் சிறுவன் அஷ்ரவ் மாநாட்டினைத் தொடக்கி வைத்தான்.

அறிமுக உரையாற்றிய ஐ. நா. குழந்தைகள் பிரிவு இயக்குநர் றோடேஸ் இந்தியாவில் சுமார் 10 கோடிக் குழந்தைத் தொழிலாளர்கள் இருப்பதாகக் கூறினார்.

# முல்லையில் ஒதுங்கிய சடலங்கள்: விசாரணை நடத்தப்பட வேண்டும்

## ஜனாதிபதிக்கு கூட்டணித் தலைவர் கடிதம்

கொழும்பு, டிச. 19

''முல்லைக்கடலில் கரை ஒதுங்கிய மூன்று மாணவிகளின் சடலங்கள் தொடர்பான குற்றவாளிகளைக் கண்டு பிடித்து அவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். இதன் மூலம் எதிர்காலத்தில் இவ்வாறான பாரதூரமான செயல்கள் இடம்பெறாமல் தடுக்க முடியும்.''

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் எம். சிவசிதம்பரம் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் இப்படித் தெரிவித்துள்ளார்.

சாக்குகளில் கட்டப்பட்டிருந்த சடலங்களில் ஒன்றில் யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரியின் இலட்சனையும், கழுத்துப் பட்டியும் காணப்பட்டன என்று கூறப்படுகிறது.

ஏற்கனவே கொலையுண்ட கிருஷாந்தி குமாரசாமி என்ற மாணவியும் இதே கல்லூரியைச் சேர்ந்தவரே.

யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த இந்த மாணவிகளின் சடலங்கள் முல்லைக் கடற்கரையில் ஒதுங்குவதற்கு பல வழிகள் இருக்கின்றன. யாழ்ப்பாணத்தில் 500 பேர் வரை காணாமல் போனதாகக் கூறப்படுகிறது.

இவர்களுக்கும் இப்படி நடந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

தமிழ்மக்களும் இந்த நாட்டின் பிரஜைகள் தான்.

அவர்களும் இந்த நாட்டில் பாதுகாப்புடன் வாழும் நிலை உருவாக்கப்பட வேண்டும்—

இப்படி அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (இ-3-150)

## ஜேர்மனி உதவி

தானியங்கள், சீனிபோன்றவற்றை உணவு நிவாரணமாகக் கொள்வனவு செய்ய ஜேர்மன் அரசாங்கம் 6 கோடி 30 இலட்சம் ரூபாவை இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

இந்த நிதி உதவியில் இருந்து கொள்வனவு செய்யப்படும் சீனி மற்றும் தானியங்கள் 120 நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் 50 ஆயிரம் பேருக்கு வழங்கப்படும். (இ-3)

# புரட்சிக்கு சதித் திட்டம்!

## தேசிய மீட்பு முன்னணி எச்சரிக்கை

இந்த நாட்டில் 71 ஆம், 88 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற இரத்தப் புரட்சி போன்ற புரட்சி ஒன்றுக்கு அரசுக்குள் உள்ள சிலரும், வெளியில் உள்ள சிலரும் இணைந்து திட்டமிடுகின்றனர்.

ஜே. வி. பி. அமைப்பின் தேசிய மீட்பு முன்னணி மேற்கண்டவாறு அரசை எச்சரித்துள்ளது.

இப்படி ஒரு புரட்சியைச் செய்துவிட்டு எம்மீது பழியைப்போட அந்த சக்திகள் திட்டமிடுகின்றன என்றும்—

ஆகவே இந்த விவகாரம் குறித்துப் பேச நேரம் ஒதுக்கித் தருமாறும்—

தேசிய மீட்பு முன்னணி ஜனாதிபதியைக் கேட்டுள்ளது. [இ-3-150]

# அமெரிக்கா இந்தியா சம்மதித்தாலே 3ஆம் தரப்பு மத்தியஸ்தம் சாத்தியம்

## அரசியல் விமர்சகர்கள் கருத்து

கொழும்பு, டிச. 19

''இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் மூன்றாந் தரப்பு மத்தியஸ்தம் எதுவும் அமெரிக்க, இந்தியா ஆகிய நாடுகளினதும் சம்மதத்தைப் பெற்றதாக இருக்க வேண்டும்.''

இப்படி அரசியல் விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர் என்று கொழும்பு வார இதழ் ஒன்று தெரிவிக்கிறது.

இலங்கை விடயத்தில் மூன்றாந் தரப்பு மத்தியஸ்தம் எனக் கூறும்போது ஐரோப்பிய அல்லது ஸ்கன்டினேவிய நாடுகளே எம்கண் முன் தெரிகின்றன.

இந்நாடுகளில் ஒன்று மத்தியஸ்தம் செய்ய வருமாயின் 2 விடயங்களைக் கவனத்திற் கொள்ள வேண்டும்.

முதலாவது இந்தியாவின் நிலைப்பாடு. இரண்டாவது அமெரிக்காவின் நிலைப்பாடு. இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் ஒரு வல்லரசு நாடாகவுள்ள இந்தியா, இலங்கைப் பிரச்சினையில் மற்றொரு நாடு மத்தியஸ்தம் செய்ய விரும்புமா?

அதே வேளையில் இந்தியா மத்தியஸ்தம் செய்யக் கூடிய அரசியல் சூழ்நிலைகளும் இன்னும் காணப்படவில்லை.

புலிகளுக்கும், இந்தியாவுக்கும் இடையேயான உறவுகள் இன்னும் ''முறுகல்'' நிலையில்தான் உள்ளன.

இதனைவிட அமெரிக்காவும் இலங்கையில் இன்று பெருமளவுக்குத் தலையிட்டிருக்கின்றது.

இராணுவத்துக்குப் பயிற்சியளிப்பது போன்ற பணிகளில் அமெரிக்க நிபுணர்கள் பெருமளவில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றார்கள்.

சர்வதேச அரங்கில் அமெரிக்காவின் துணையையே இலங்கை பெருமளவுக்கு நம்பியிருக்கின்றது.

மூன்றாந் தரப்பு மத்தியஸ்தம் எதுவும் இந்த இரு நாடுகளினதும் சம்மதத்தைப் பெற்றதாக இருக்க வேண்டும்.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## பிரஜாவுரிமை வழங்கும் சட்டம் திருத்தப்படும்?

கொழும்பு, டிச. 19

பிரஜாவுரிமை வழங்கும் சட்டத்தில் மாற்றம் கொண்டு வருவது குறித்து போக்குவரத்து, மகளிர் விவகார அமைச்சர் ஸ்ரீமனி அத்துலத்முதலி ஆராய்ந்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது நடைமுறையில் உள்ள பிரஜாவுரிமைச் சட்டத்தின் படி வெளிநாட்டு ஆண் ஒருவர் இலங்கைப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

வீட்டுத் தளபாடங்கள், கடை சோக்கேஸ், ரியூட்டறி மேசைகள், எவர் சில்வர், மரப் பெட்டகங்கள், ஹீரோ, லுமாலா சைக்கிள்கள், C.90 சுப்பர் கப் (களுத்துத் திறப்பு), இரும்புப் பெட்டி, தையல் மெசின் ஆகியன விற்பனைக்குண்டு. க. கோபால், ஜும்மா பள்ளி வாசல் லேன், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(44182)

எமது சங்கத்தில் விதை வெங்காயம் விற்பனைக் குண்டு. தேவையானவர்கள் 25 - 12 - 96 ஆம் திகதிக்கு முன் கீழ்க்காணும் விலாசத்தில் நேரில் பார்வையிட்டு தங்கள் விலை விவரங்களை சமர்ப்பிக்கவும்.
பொது முகாமையாளர், யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி.
(சி-3753)

பிரான்ஸ் தயாரிப்பான Bernard 20 H.P டீசல் நீரிறைக்கும் இயந்திரம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ஞா. யேசுதாசன்/அருள்ராஜ் 46, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (ஆஸ்பத்திரி வீதி — கோவில் வீதி, சந்திக்கு அருகாமை).
(441

ஜேர்மன் வயலின், B.S.A துவிச்சக்கர வண்டி, ஷீரோ லேடிஸ் துவிச்சக்கரவண்டி, சிங்கர் 15 K தையல் மெசின் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு; 42/1, புதுவீதி, அத்தியடி, யாழ்ப்பாணம்.
(44193)

### எரு விற்பனைக்கு

எமது சங்கத்தில் எரு விற்பனைக்குண்டு. தேவையானவர்கள் 25-12-96 ஆம் திகதிக்கு முன் கீழ்க்காண் விலாசத்தில் எருவைப் பார்வையிட்டு தங்கள் விலை விவரங்களைச் சமர்ப்பிக்கவும்.
பொது முகாமையாளர், யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி.
(சி-3754)

### தவறிவிட்டது

நாகமுத்து குணரத்தினம் என்பவரின் 430022695 V இலக்க தேசிய அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் நா. குணரத்தினம், மண்ணெண்ணெய் கடை (மானிப்பாய் மருதடி விநாயகர் கோயிலடி) எனும் முகவரியில் ஒப்படைக்கவும்.
(44186)

செ. சங்கர்சிவம் ஆகிய எனது 552142446 V இலக்க முடைய தேசியஅடையாள அட்டையும், தொழில் அட்டையும் யாழ். நகரில் 16 - 12 - 96 இல் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இல. 41, தபாலக வீதியிலுள்ள லிங் லெண்டிங் லைபிரறியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.
(44187)

## விவசாயிகள் ஒய்வூதியம்

யாழ்ப்பாணம், டிச. 19
விவசாய ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் ஓய்வூதியம் பெறும் விவசாயிகளின் டிசம்பர் மாதத்துக்கான ஓய்வூதியக் கொடுப்பனவு எதிர்வரும் 23 ஆம் திகதி கமத்தொழில் காப்புறுதிச்சபை மாவட்டக் காரியாலயத்தில் வைத்து வழங்கப்படும் என்று கமத்தொழில் காப்புறுதிச்சபை உதவிப் பணிப்பாளர் திரு, க. சுந்தரேசன் தெரிவித்தார்.
(உ-3)

### கணிதம், ஆங்கிலம் '97

முதலாம் தவணைப் பரீட்சையில் தவறாது உயர்ந்த பெறுபேறடைய ஆரம்பத்திலிருந்து ஆண்டு 6 தொடக்கம் O/L வரை கற்பிக்கப்படும். முன்னாள் யாழ். மத்திய கல்லூரி ஆசிரியர். இல. 85, சிவன் கோலயிடி, (சிவன்கோயில் மேற்கு வீதி) திருநெல்வேலி.
(44199)

### வீடு வாடகைக்கு

வெள்ளவத்தையிலிருந்து தெகிவளை ஆரம்பிக்கும் இடத்தில் காலி வீதியிலிருந்து மிக அருகாமையில் வீட்டின் மேல்மாடியில் படுக்கையறை, நவீன குளியவறை, சிறிய ஹோல், (குசினி, வரவேற்பறைக்கு) முதலியவற்றுடன் ஒரு வருடத்திற்கு முற்பணமாகவே 84.000 /= வுடன் வீடு வாடகைக்குண்டு. தண்ணீர், மின்சாரம் இலவசம். விவரமாக விண்ணப்பிக்கவும். மே/பா இல. 565, உதயன் பணிமனை, யாழ்ப்பாணம்.
(44198)

## மென்பானம் தயாரிப்பாளர் கவனத்திற்கு

எங்களிடம் கொழும்பில் இருந்து தருவிக்கப்பட்ட **சோடா மூடிகள்** கையிருப்பில் உள்ளன. தேவையானவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**சிவா நறுமணப் பூங்கா**
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/3748)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 15 — 05 — 1915
மறைவு: 19 — 12 — 1995

**திருமதி நடராசா தங்கமணி**
**திதி: 07 - 01 - 97**

எங்கள் குடும்பத்தின் தலைவியாக
பாசமுடன் எங்களை வழி நடத்திய
எங்கள் அன்புத் தெய்வமே!
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டு
சென்றாலும் நாம் உம்மை மறவோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சீனாப்புலம்,
பொலிகண்டி.
(44191)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 10 — 04 — 1938
உதிர்வு: 19 — 12 — 1994

பிரம்மஸ்ரீ
**தியாகராஜஐயர் லக்ஷ்மிகாந்தன்ஐயர்**
**(காந்தம் ஐயா)**
(சங்கத்தானை)
**திதி: 26 - 12 - 96**

அப்பா! உங்கள் பாசமும் பரிவும்
என்றும் எங்களை வாழ்விக்கும்.
உங்கள் ஆத்ம சாந்திக்கு
என்றென்றும் பிரார்த்திக்கும்:

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரன்.

''சிவானந்த கிரி'',
பாங்க் லேன்,
சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.
(9085)

## ராஜன் வைத்திய நிலையம்

யாழ்ப்பாணம்

எல்லா நோய்களுக்கும் சிறந்த முறையில் சிகிச்சை அளிக்கப்படும்.

Dr. S. இராஜ நடேஸ்வரன்
(D. S. A. M)

இல. 155A, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
(9086)

## எமது வாடிக்கையாளர்களுக்கு முக்கிய அறிவித்தல்

**நத்தார், புதுவருட தினத்தை முன்னிட்டு**
எமது ஸ்தாபனம் தற்காலிகமாக

**லைடன் புடைவை நிலையம்**
**இல. 27, சுவாட்ஸ் லேன், சுண்டுக்குளி**

என்னும் இடத்தில் **31-12-96** வரைக்கும் இயங்கும்.

**01 - 01 - 1997** இல் இருந்து எமது ஸ்தாபனம்

**இல. 32, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்**

என்னும் முகவரியில் இயங்கும் என்பதை அறியத் தருகின்றோம். மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

சுவாட்ஸ் லேன் வரும் பாதை:
★ கண்டி றோட் ஆசீர்வாதம் அச்சகத்துக்கு முன்னால் வரும் ஒழுங்கை.
★ ஆச்சிரமத்துக்கு முன்னால் வரும் ஒழுங்கையாலும் வரலாம்.

(சி/3743)

## கண்ணீர் அஞ்சலி

**திரு. ஆறுமுகம் அருளம்பலம்**

காரைநகர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 35 வருடகாலம் கடமை புரிந்து, பொது முகாமையாளராக கடமையாற்றி ஓய்வு பெற்று இருந்த

**திரு. ஆறுமுகம் அருளம்பலம்**

அவர்கள் 16-12-1996 திங்கட்கிழமை வவுனியாவில் சிவபதம் அடைந்துள்ளார்,

அன்னாரின் ஆன்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்,

இயக்குநர், சபை உறுப்பினர், பணியாளர்.
காரைநகர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

காரைநகர்.
(44201)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 06 — 11 — 1925
மறைவு: 19 — 11 — 1996

**திரு. வி. எஸ். சுப்பிரமணியம்**
(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர், திறைசேரி, உள்நாட்டிறைவரித் திணைக்களம்)

பொறை அன்பு அடக்கத்தின் வடிவாகினீர்
நிறை துன்பம் நமக்காக்கி முடிவாகினீர்
இறைவன்தன் அடிசார்ந்து பொலிவாகுவீர்.

அன்னாரின் அந்தியேட்டி நிகழ்வுகள் இன்று (19-12-96) காலை 8 மணிக்கு ஆரம்பமாகும். உற்றார், உறவினர், நண்பர்கள் சமுகந் தந்து சிறப்பிக்க அழைக்கிறோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

'மயிலைவாசா'
கரவெட்டி மத்தி,
கரவெட்டி.
(44194)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிரந்தரத் தீர்வு என்ற எதிர்பார்ப்பை கொச்சைப்படுத்தும் தேர்தல் அறிவிப்பு

## மக்களின் அரசியல் அபிலாஷைகளுக்கு மீண்டும், மீண்டும் வேட்டு!!

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இறுதிப் பொதுத் தேர்தல் 1977 ஆம் ஆண்டிலேயே இடம்பெற்றது. அத் தேர்தலின் பின்னர் உருப்படியாக ஒரு தேர்தலும் யாழ்ப்பாணத்தில் இன்று வரை இடம் பெறவில்லை.

1982 ஆம் ஆண்டு காலஞ்சென்ற ஜனாதிபதி ஜே ஆர். ஜெயவர்த்தனாவின் அரசாங்கம் தனது அரைகுறைத் தீர்வான மாவட்ட அபிவிருத்திச் சபையை அறிமுகப்படுத்தி அதற்கான தேர்தலையும் வடக்கே நடத்தி இருந்தது. ஆனால் அத்தேர்தல் குளறுபடியானதாகவும், முறைகேடானதாகவுமே இருந்தது.

இருந்தபோதிலும், மாவட்ட அபிவிருத்திச்சபை தோற்றுவிக்கப்பட்டு வடக்கே அச்சபையின் தலைவராகச் சட்டத்தரணி சு. நடராசா பதவியேற்றார். இவரைப் 'பொட்டர் நடராசா' எனவும் கூறுவதுண்டு.

'பொட்டர் நடராசா'வின் பதவிக்காலமோ அல்லது வடக்கே மாவட்ட அபிவிருத்திச் சபையின் நிர்வாகமோ நெடுநாள் நீடிக்கவில்லை.

காலப்போக்கில் 'பொட்டர் நடராசா'வுக்குப் பெடியள் 'பொட்டு' வைத்தும் விட்டிருந்தார்கள். 'பொட்டு வைப்பது' என்பது வடக்கே தீவிரவாதம் வளர்ச்சிபெற்ற காலத்தில். ஒருவருக்கு நெற்றியில் சுடுவதையே யாழ்ப்பாணப் பேச்சுவழக்கில் குறித்து நின்றது.

'பொட்டர் நடராசா' மட்டுமல்ல, அக்காலத்தில் ஸ்ரீ.ல.சு. கட்சி, ஐ.தே.க. போன்ற தேசியக்கட்சிகளைச் சேர்ந்த பலரும் தீவிரவாதம் வளர்ச்சிபெற்ற காலத்தில் சுடப்பட்டிருந்தனர். 1982ஆம் ஆண்டு மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தல் குழப்பங்களே யாழ்ப்பாணப் பொதுசன நூலகம், ''ஈழநாடு'' பத்திரிகைக் காரியாலயம், யாழ்ப்பாணச் சந்தை ஆகியவற்றுக்கு தீ வைத்தும் விட்டிருந்தது.

### இடைவெளி அதிகரித்தது

மாவட்ட அபிவிருத்தி சபை ஏற்கப்படாததும், அதனைத் தொடர்ந்து 83ஆம் ஆண்டு கொழும்பில் வெடித்த இனக் கலவரம், அக்கலவரத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட அரசியல் நிகழ்வுகள் என்பன வடக்குக்கும், தெற்குக்குமிடையிலான இடைவெளியை அகலமாக்கி விடுவதாகவே இருந்தன.

கொழும்பு ஆட்சியின் அமுலாக்கங்கள் எதுவும் வெற்றியளிக்காத தன்மைகளே காலப்போக்கில் விரிவடைய ஆரம்பித்தன.

அரசியல் நிலைப்பாடுகள் மலையேறி எங்கும், எதிலும் தீவிரவாத நடைமுறைகளே தலையெடுக்க ஆரம்பித்தன.

வடக்கு - கிழக்கில் தீவிரவாதப்போக்குப் பலமடைவதற்கு ஏதுவாக தென்னிலங்கையில் ஜே. ஆர். ஜெயவர்த்தனா அறிமுகப்படுத்திய நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையின் கீழான அம்சங்களும் நன்கு துணை போயின.

தமிழ் மிதவாதக் கட்சியும், 1977ஆம் ஆண்டு வடக்கு - கிழக்கு மக்களின் தேர்தல் ஆணையைப் பெற்ற கட்சியுமான தமிழர் விடுதலைக் கூட்டணி கூட ஜே. ஆரின் போக்கில் அதிருப்தியடைந்தது. அக்கட்சி நாடாளுமன்றிலிருந்தும் வெளியேற்றப் பட்டிருந்தது. இந்தியாவில் அடைக்கலம் தேட வேண்டிய நிலையும் கூட்டணித் தலைவர்களுக்கு ஏற்பட்டது.

70 ஆம் ஆண்டுகளின் இறுதிப் பகுதியில் ஆரம்பமான தமிழ்த் தீவிரவாதம் 1983 ஆம் ஆண்டுக்குப் பிற்பட்ட காலப்பகுதியில் உச்சக்கட்டத்தை எட்டியிருந்தது.

### கெடுபிடிகளும் ஆயுதப் போராட்டமும்

யாழ்ப்பாணத்தில் பல்வேறு தமிழ் ஆயுதப் போராட்ட அமைப்புகள் உருவாகின. பேரினவாத ஆட்சியாளர்களது கெடுபிடியான நடவடிக்கைகள் ஆயுதப் போராட்டமொன்றை நியாயப்படுத்துவதாகவும் விளங்கியது!

> **கொழும்பிலிருந்து வெளிவரும் "தினமுரசு" வார இதழில், "அரசுக்கு தேவையான இடைத்தரகர்கள்; இன்னொரு துரையப்பா தேவையா?" என்ற தலைப்பில் "இராஜதந்திரி" எழுதிய அரசியல் கட்டுரை இங்கு மறுபிரசுரஞ் செய்யப் படுகிறது.**

லெபனான், இந்தியா போன்ற நாடுகளில் தீவிரவாத சிந்தனை கொண்ட வடக்கு-கிழக்கு இளைஞர்கள் ஆயுதப் பயிற்சி பெற்று வெளியேறினார்கள்.

இந்த இளைஞர்களின் எழுச்சியே யாழ்ப்பாணத்தின் அரசியல் -சமூக அமைப்பில் ஒரு புதிய பிரவாகத்துக்கு வழியமைத்தது.

வடக்கு-கிழக்கு மக்கள் அனைவருமே புரட்சிகர சிந்தனைகள், நடவடிக்கைகள் வசப்படும் சூழ்நிலைகளும் தோன்றலாயின.

இருந்தபோதிலும், ஒற்றுமை பேணி ஒரே இலக்கை அடைய வேண்டிய ஆயுதப் போராட்ட அமைப்புகளின் செயற்பாடுகள் நாளடைவில் உருக்குலைந்து மோசமான குத்து வெட்டுக்களுக்கும் வழிகோலியிருந்தன.

1986 ஆம் ஆண்டில் வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் ஆயுதப் போராட்ட அமைப்புகளிடையே ஏற்பட்ட மோதல்கள் அவற்றைப் பலவீனமாக்கியதுடன், 'குளத்தைக் கலக்கிப் பருந்துக்கு இரை கொடுக்கும்' சூழ்நிலைகளைக் கூட உருவாக்கியிருந்தது.

இதன் விளைவாகவே இந்திய - இலங்கை ஒப்பந்தம் கொண்டுவரப்பட்டு. அதனடிப்படையில் வடக்கு-கிழக்கில் 1988 ஆம் ஆண்டு மாகாண அபிவிருத்தி சபைத் தேர்தலும் நடத்தப்பட்டது.

இந்திய அமைதிப்படையின் தலையீட்டுடன் நடத்தப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாண சபைத் தேர்தல் நேர்மையாகவும், சுதந்திரமாகவும் இடம்பெறாத நிலையில் வடக்கு - கிழக்கு மாகாண சபை தோன்ற வழி வகுத்திருந்தது.

இருந்தபோதிலும் ஒரு கேலிக் கூத்தாக வடக்கு – கிழக்கு மாகாண சபை உருவானதுடன், காலப்போக்கில் அச்சபையின் நிர்வாகமும், இந்திய அமைதிப்படையின் வெளியேற்றத்துடன் நிலை குலைந்து போயிற்று.

எனவே இத்தகைய நிகழ்வுகள் வடக்கு – கிழக்கில் ஓர் அரசியல் தீர்வு எட்டப்படாத வரை ஜனநாயக நிறுவனங்கள் பலமானவையாக இயங்க முடியாதென்பதையே புலப்படுத்தின.

ஆயினும் ஓரிரு வருடங்களுக்கு முன்னர் வடக்கு கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்துவதற்கான சூழ்நிலைகள் இல்லை எனத் தெரிவிக்கப்பட்ட போதிலும், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு போன்ற பகுதிகளில் உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் நடத்தப்பட்டிருந்தன.

இவற்றை முன்னுதாரணமாகக் கொண்டே வடக்கில் - குறிப்பாக யாழ். குடாநாட்டில் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் நடத்தப்படும் என்று அரசாங்கம் அறிவித்தது.

படையினரின் பலத்தோடு உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களை நடத்தலாம் என்ற நம்பிக்கை காரணமாகவே அவ்வாறான அறிவித்தல் வெளியிடப்பட்டது.

ஆயினும் கடந்த காலத் தேர்தல்களைப் போல அல்லாமல் இம்முறை தமிழ்க் கட்சிகள் யாழ். குடா நாட்டில் போட்டியிட மறுத்து விட்டன.

### பிரஜைகள் குழு பின்வாங்கியது

உள்ளூராட்சிச் சபைத்தேர்தல் அறிவிப்பு வெளியானதும் தமிழ்க் கட்சிகள் யாழ்ப்பாணம் செல்ல முன்வரக்கூடும் என அரசாங்கம் நினைத்திருக்கலாம்.

தமிழ்க் கட்சிகள் போட்டியிட மறுத்தால், சுயேச்சைக் குழுக்களைப் போட்டியிட வைக்கமுடியும் என படைத்தரப்பினர் அரசாங்கத்துக்கு நம்பிக்கை கொடுத்திருக்கலாம்.

ஆனால் தமிழ்க் கட்சிகளே போட்டியிட முன்வராத நிலையில் தமது உயிரைப் பணயம்வைத்து போட்டியிட வேறுயாரும் முன்வரமாட்டார்கள்.

தேர்தல் அறிவிப்பு வெளியான பின்னர் யாழ். பிரஜைகள் குழுக்களை அழைத்துப் படையினர் பேச்சு நடத்தினார்கள். பிரஜைகள் குழு உறுப்பினர்கள் பின்வாங்கி விட்டனர் என்றே அறிய முடிகிறது.

அரசாங்கத்தின் உயர் மட்டத்திலும் ஜனாதிபதி, பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஆகியோரைத் தவிர ஏனைய அமைச்சர்கள் பலரும் வடக்கில் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் அறிவிப்பையிட்டு வியப்படைந்தவர்களாகவே காணப்பட்டனர்

'தமக்கு இந்த அறிவித்தல் தொடர்பாக எதுவும் தெரியாது' என்று நீதியமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தன்னைச் சந்தித்த தமிழ்க்கட்சி எம். பிக்கள் சிலரிடம் வியப்புத் தெரிவித்ததாக அறியமுடிகிறது.

தமிழ்க் கட்சிகளை குறிப்பாக ஈ.பி.டி.பி, புளொட் ஆகிய கட்சிகளை யாழ். செல்லுமாறு ஜனாதிபதி சில மாதங்களுக்கு முன்பாக கோரிக்கை விடுத்திருந்தார்.

அக் கோரிக்கை தொடர்பாக சாதகமான பதில் அக் கட்சிகளிடம் இருந்து கிடைக்கவில்லை.

தேர்தல் அறிவிப்பு வெளியானால் அக்கட்சிகள் தாமாகவே யாழ். செல்லும் என ஜனாதிபதி நினைத்திருக்க வாய்ப்புண்டு.

உள்ளூராட்சித் தேர்தல் அறிவிப்பு தமிழ்க் கட்சிகளுக்கு அரசாங்கம் விடுத்த சவால் போலவும் அமைந்திருந்தது.

'தமிழ்க் கட்சிகள் போட்டியிடாவிட்டால் வேறு வேட்பாளர்களை நிறுத்தி தேர்தலை நடத்துவோம்' என்பதுபோலவே அரசின் அறிவிப்பு காணப்பட்டது.

தமது தலைகளுக்கு மேலாக தமிழ் மக்களுடன் அரசாங்கம் தொடர்பு கொள்ள நினைப்பதாக முன்னர் விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் சந்தேகம் கொண்டிருந்தனர்.

இப்போது அதேபோன்றதொரு சந்தேகத்தை தமிழ்க் கட்சிகளிடமும் அரசின் அறிவிப்பு தோற்றுவித்துள்ளது.

புலிகள் இயக்கத்தினரை மட்டுமல்லாமல் ஏனைய தமிழ்க் கட்சிகளையும் ஒதுக்கி வைத்துவிட்டு வடக்கு-கிழக்கு விவகாரங்களைக் கையாள அரசு முனைகிறது என்பதை உள்ளூராட்சித் தேர்தல் அறிவிப்பு உணர்த்துவதாக அமைந்தது.

### துரோகிப்பட்டத்துடன் அடங்கிய துரையப்பாவின் குரல்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பதவியில் இருந்தபோது தான் அல்பிரட் துரையப்பா யாழ்ப்பாண நகர மேயராக இருந்தார்.

அப்போது தமிழ் மக்களின் அரசியல் தலைமையாக விளங்கிய தமிழர் விடுதலைக் கூட்டணியினருக்கு போட்டியாக துரையப்பா போன்றவர்களை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கம் உருவாக்கி வளர்த்து வந்தது.

தமது தரப்பிலும் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் இருக்கிறார்கள் என சித்திரிப்பதே அப்போது ஆட்சியாளரின் நோக்கமாக அமைந்திருந்தது.

எனினும் தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கு மாறாக, அரசின் குரலாக ஒலித்த துரையப்பாக்களின் குரல் தமிழ் மக்கள் மத்தியில் எடுபடவில்லை. ''துரோகி'' என்ற பட்டத்தோடு துரையப்பாவின் குரல் இறுதியாக அடங்கிப்போனது.

இந்நிலையில் யாழ். குடாநாட்டில் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்துவதாயின் மீண்டும் துரையப்பாக்களை உருவாக்க வேண்டும்.

புலிகள் இயக்கத்தினர் பலம் வாய்ந்த அமைப்பாக உள்ள நிலையில் தம் உயிரைப் பணயம் வைக்க எவரும் துணியமாட்டார்கள்.

ஆளும் கட்சிக்கு சார்பாகப் பேசும் தமிழ்ப் பிரமுகர்கள் கூட பகிரங்கமாகத் தம்மை இனங்காட்ட முன்வராத நிலைதான் காணப்படுகிறது.

குறிப்பிட்ட பிரமுகர்கள் ஆளும் தரப்பாருடன் திரை மறைவில் நட்புக் கொண்டவர்களாகவே காணப்படுகின்றனர். துணிந்து பகிரங்க அரங்கத்தில் முகம் காட்டுவதற்கு முன்வரமாட்டார்கள் என்பது தெளிவு.

எனவே — தமிழ்க் கட்சிகள் போட்டியிட மறுத்தால், உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு வேட்பாளர் பட்டியல் தயாரிப்பது இயலாத ஒரு விடயம் என்பதை அரசாங்கம் உணர்ந்தேயிருக்கும்.

புலிகள் இயக்கம், மற்றும் தமிழ்க் கட்சிகள் ஆகியவற்றின் பிரசன்னம் இல்லாமல் தமக்கும், தமிழ் மக்களுக்கும் இடையில் இடைத்தரகர்களை உருவாக்க அரசாங்கம் முயலுமானால் அந்த முயற்சியில் தோல்வியையே தழுவும்.

உள்ளூராட்சித் தேர்தல் அறிவிப்பும், அதில் ஏற்பட்ட பின்னடைவும் நேரடியான நிரந்தரத்தீர்வு முயற்சிகளே பயனளிக்கும் என்பதையே துல்லியமாகப் புலப்படுத்துகின்றன.

எனவே நிரந்தரத்தீர்வு என்ற எதிர்பார்ப்பைக் கொச்சைப்படுத்தி, வடக்கு—கிழக்கு மக்களின் அரசியல் அபிலாஷைகளுக்கு மீண்டும் மீண்டும் ஆட்சியாளர்கள் வேட்டுவைக்கலாகாது.

ஆரோக்கியமான அரசியல் தீர்வைக் கொண்டு வந்து அனைத்து மக்களும், அரசியல் சக்திகளும் பங்கேற்கும் ஜனநாயக நடைமுறைகள் தோற்றம் பெற வேண்டியதே காலத்தின் தேவையாக இருக்கின்றது.

★

## வடக்குக்கான லொறிச் சேவை ஸ்தம்பிதமடையும் ஆபத்து

### நிலுவையாக பல லட்சம் ரூபா

வவுனியா, டிச. 19

வவுனியாவில் இருந்து வடக்கே பொருள்கள் ஏற்றிச் செல்லும்லொறிகளின் சேவை ஸ்தம்பிதமடையலாம் என தெரிவிக்கப்படுகிறது.

வவுனியாவில் இருந்து கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களுக்கு உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிச் செல்லும் லொறிகளுக்கான கூலியை புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு பல காலமாக வழங்காததாலேயே இந்நிலை ஏற்படலாம் என்று கூறப்படுகிறது.

மன்னார் மாவட்ட லொறி உரிமையாளர்களுக்கு இலட்சக்கணக்கான ரூபா கொடுப்பனவு நிலுவையாக உள்ளதாகவும் —

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட லொறி உரிமையாளர்களுக்கு சுமார் 3கோடி ரூபா வரையிலான கொடுப்பனவு நிலுவையாக உள்ளதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

நிலுவையாக உள்ள இந்த தொகையை புனர் வாழ்வு, புனரமைப்பு அமைச்சு வழங்காத பட்சத்தில் லொறிச் சேவையை நிறுத்தப் போவதாக அவர்கள் அறிவித்துள்ளனர். (இ-3)

## நன்கொடை கொடுப்பனவு

கொழும்புத்துறை, டிச.19

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கான நன்கொடைப் பணத்துக்கான காசோலைகள் இன்று முதல் எதிர்வரும் திங்கட்கிழமை வரை மாநகரசபை அலுவலகத்தில் வைத்து வழங்கப்படும் என்று ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம் தெரிவித்தார்.

சனசமூக நிலைய நிர்வாகிகள் தமது ஆவணங்களைச் சமர்ப்பித்து காசோலையைப் பெறுமாறு கேட்கப்பட்டுள்ளது. [இ-30]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமலை மாவட்டத்தில்
# 5 ஆயிரம் ஏக்கரில் நெற்சாகுபடி இல்லை

திருகோணமலை, டிச. 19

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள இரு குளங்களும் நிறைந்துள்ள போதும் அப்பகுதி தமிழ் விவசாயிகள் இடம் பெயர்ந்து விட்டதால் அந்த நீரைப் பயன்படுத்தி விவசாயம் செய்ய முடியாத நிலை உருவாகியுள்ளது. இதனால் சுமார் ஐயாயிரம் ஏக்கர் நிலம் வீணாகக் கிடக்கிறது.

திருமலையில் உள்ள யான் ஓயாவில் நிரம்பியுள்ள நீரில் இருந்து ஆயிரத்து 455 ஏக்கர் நிலத்தில் நெற்செய்கை செய்ய முடியும். புல்மோட்டை, திரியாய் பகுதியில் வாழும் தமிழ் மக்களே அங்கு நெற் செய்கையில் ஈடுபட்டு வந்தனர்.

ஆனால் இந்தப் பகுதி மக்கள் வெளியிடங்களுக்கு இடம் பெயர்ந்துள்ளதால் அங்கு விவசாய நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

பன்குளம் வீதியில் உள்ள முதலிக்குளத்தின் பாய்ச்சல் பிரதேசத்திலும் சுமார் 4 ஆயிரத்து 40 ஏக்கர் நிலத்தில் நெற்செய்கை மேற்கொள்ளப்படவில்லை. அங்குள்ள தமிழ் மக்களும் இடம் பெயர்ந்துள்ளனர்.

(உ-3-150)

## பிரஜாவுரிமை...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி

பெண்ணை திருமணம் செய்வதன் மூலம் இலங்கைப் பிரஜாவுரிமை பெற முடியாது.

ஆனால் வெளிநாட்டுப் பெண் ஒருவர் இலங்கை ஆணை திருமணம் செய்வதன் மூலம் பிரஜாவுரிமை பெற முடியும்.

இந்த வேறுபாட்டை நீக்கும் வகையில் சட்டத்தில் மாற்றம் கொண்டு வருவது குறித்தே ஆராயப்படுகின்றது.

(உ-3-150)


வலி- கிழக்கு
(தெ.ப.) ப. நோ. கூ. சங்கம்
நீர்வேலி

**வெற்றுச்சாக்குகளுக்கான கேள்வி விண்ணப்பம் கோரல்**

எம்மிடம் வெற்றுச்சாக்குகளும், உரப்பைகளும் விற்பனைக்குண்டு. தங்கள் விலையைக் குறிப்பிட்டு 20 - 12 - 1996 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும். சாக்குகளைப் பார்வையிட விரும்புவோர் சங்க அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

பொது முகாமையாளர்

நீர்வேலி
1996-12-12
(சி/3756)


# அரசின் நடவடிக்கைகளால் தமிழ்க் குழுக்கள் பாதிப்பு!

## ஜனாதிபதிக்கு நேரில் விளக்க அரச தரப்பினர் முடிவு

கொழும்பு, டிச. 19

அரசை ஆதரிக்கும் தமிழ் அமைப்புக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அரசின் நடவடிக்கைகளால் அந்த அமைப்புக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள அதிருப்திஆகியவை தொடர்பாக அரச எம்.பிக்கள் ஜனாதிபதியிடம் விளக்கவிருக்கின்றனர்.

அமைச்சர் அஷ்ரப்பின் வீட்டில் கடந்தவாரம் இடம் பெற்ற விருந்துபசாரம் ஒன்றில் அமைச்சர்களான நிமால் சிறிபால டி. சில்வா, மகிந்த ராஜபக்ஷ, பிரதியமைச்சர் மகிந்த விஜேசேகர ஆகியோர் உட்பட பல அரச தரப்பு எம். பிக்கள் கலந்து கொண்டனர்.

அரசை ஆதரிக்கும் தமிழ்க் குழுவினர் எதிர்நோக்கும் பல பிரச்சினைகள் குறித்து அமைச்சர் அஷ்ரப் அங்கு சகலருக்கும் விளக்கினார்.

புலிகளைப்பற்றி தகவல் கொடுக்கப்போன ஈ. என். டி. எல். எவ். உறுப்பினர் ஒருவர் கைதாகி 9 மாதங்கள் சிறையில் இருந்தமை பற்றியும் —

புளொட் தலைவரின் தனிப்பட்ட பாதுகாப்பு உத்தியோகத்தர் மீது அவசியமற்ற விதத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டமை பற்றியும்—

டக்ளஸ் தேவானந்தாவின் வளர்ப்புத் தாயைப் பாதுகாக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றியும் —

இந்த வைபவத்தில் அஷ்ரப் குறிப்பிட்டார்.

அரசை ஆதரிக்கும் தமிழ் அமைப்புக்கள் மீது ஏனோ தானோ என்ற விதத்தில் கவனிப்பு நடப்பதால் அவை அதிருப்தியடைந்துள்ளன என்றும் —

இந்நிலை நல்லதல்ல என்றும் — அவர் கூறினார்.

''ஈ. என். டி. எல். எவ்வினர் இப்போது புலிகளுடன் இணக்கப்பாடு கொண்டுள்ளார்கள். விடுதலைப் புலிகள் மற்றொரு அமைப்புடன் முதல் தடவையாக இணக்கம் கண்டுள்ளனர். இதே விதமாக மற்ற அமைப்புக்களையும் அது அரவணைத்தால் நிலைமை திசை திரும்பலாம். எனவே தமிழ் அமைப்புக்கள் விடயத்தில் அரசு அதிக சிரத்தை காட்ட வேண்டும்'' — என்று அஷ்ரப் தெரிவித்ததை ஏனையோரும் ஏற்றுக் கொண்டனர்.

இந்த விடயத்தை ஜனாதிபதியிடம் நேரில் விளக்க வேண்டும் என்று அவர்கள் முடிவு செய்தனர். (உ-3)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 01 — 04 — 1942



உதிர்வு: 31 — 12 — 1995

**திருமதி தம்பித்துரை செல்லம்**

**திதி: 19 - 12 - 1996**

அன்பைச் சுரந்து அமுதாய்த் தந்த இன்பத் தாயே! எம்மைத் தாங்க எத்துணை துன்பைச் சுமந்தாய். மண்ணில் மறைந்தது உன்னுடலே, மறையா நினைவு மலையென வளரும்.

பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

செ. நவரத்தினராசா [கப்பூர்],
வரிசயப் புலம்,
குப்பிளான் தெற்கு.
[44202]


## தேவ சமாதான தூதுவர்கள் மாநாடு

யாழ்ப்பாணம், டிச. 19

யெகோவாவின் சாட்சிகளின் தமிழ் மாவட்ட மாநாடு நாளை 20ஆம் திகதி தொடக்கம் 22 ஆம் திகதி வரை தினமும் காலை 9.30 மணி முதல் யாழ்ப்பாணம் நல்லூர் சட்டநாதர் வீதியில் உள்ள இளங்கலைஞர் மன்ற கலா மண்டபத்தில் நடைபெறும்.

''தேவ சமாதானதூதுவர்கள்'' என்ற பொருளில் இந்த மாநாடு நடைபெறும்.

22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11. 30 மணிக்கு ''ஏன் தேவராட்சிய ஏற்பாடுகளை மதிக்க வேண்டும்'' — என்ற பொருளிலான வேதாகம நாடகம் நடைபெறும். பிற்பகல் 2மணிக்கு ''உண்மையான சமாதானம் இறுதியாக!—எந்த ஊற்று மூலத்தில் இருந்து?'' என்ற பொருளில் உரை இடம் பெறும். (உ)


## நினைவஞ்சலி

31 ஆம் நாள்



**திருமதி மருதப்பா அன்னலட்சுமி**

**தோற்றம்:** 06 - 10 -1906 **மறைவு:** 17 - 11 - 1996

10 ஆம் ஆண்டு



**திருமதி வைத்திலிங்கம் தங்கமலர்**

**தோற்றம்:** 09 - 11 - 1927 **மறைவு:** 01 - 12 - 1986

அன்னையையும், அன்னைக்கு அன்னையையும் நெஞ்சார நினைத்து அன்னவர் பாதங்களை எங்கள் சிரங்கள் சேர்ந்து நினைவு கூரும்:

- குடும்பத்தவர்

தங்கமலர் இல்லம்,
உடையார் ஒழுங்கை,
கொக்குவில்.
(44208)

## தொடர்பு கொள்ளவும்

கோண்டாவிலைச் சேர்ந்த
துரையப்பா சிவசுந்தரம்
அவர்களை முக்கிய விடயமாக உடன் வந்து என்னைச் சந்திக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

**வ. லோகன்**
ஊரெழு கிழக்கு,
சுன்னாகம்.
(44209)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## வேண்டாம் சூதாட்டம்

இனப் பிரச்சினைக்கான தீர்வை அரசாங்கம் யுத்தத்தின் மூலம் காண விரும்புகிறதா அல்லது சமாதான வழியில் சென்று காண முனைகிறதா? இது குறித்து அரசாங்கம் திட்டவட்டமாக உத்தியோகபூர்வமாக அறிவிக்க வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவின் கேள்வி இது. இந்தக் கேள்விக்குப் பதில் கிடைத்த பின்னர் தான், இனப் பிரச்சினைக்குரிய தீர்வு தொடர்பாகத் தமது கட்சி என்ன அணுகுமுறையைக் கைக்கொள்வது என்பது குறித்து முடிவு செய்யும் என்ற தொனியில் அவர் முழங்கியிருக்கிறார்.

அந்தக் கேள்வியை அடித்து விடுவது போல, அரசாங்கம், எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியிடம் காட்டமான கேள்வி ஒன்றைத் தொடுத்துள்ளது.

இனப்பிரச்சினைக்கென அரசாங்கம் முன்வைத்துள்ள அதிகாரப் பரவல் தீர்வு யோசனை குறித்து ஐ.தே. கட்சியின் நிலைப்பாடு என்ன? அதனை ஆதரிக்கிறதா, எதிர்க்கிறதா என்பது குறித்துப் பகிரங்கமாக அறிவிக்க வேண்டும்.

அறிவிப்பை வெளியிட காலக்கெடுவும் வேறு விதித்திருக்கிறது அரசு!

யுத்தத்தின் மூலம் சமாதானம் என்ற ஒவ்வாத ஒரு "சித்தாந்தத்தை" அரசு கைக்கொண்டிருக்கின்றது. இந்தச் சித்தாந்தம் உண்மையான சமாதானத்தையும் அமைதியையும் தோற்றுவிப்பதற்கான நேர்மையான வழி அல்ல; நடைமுறைச் சாத்தியமானதும் அல்ல; என்பது யதார்த்தம் புரிந்த பலராலும் சுட்டிக்காட்டப்படும் ஒன்று.

ஆகையால், ரணிலின் கேள்வியில் நியாயம் இல்லாமல் இல்லை. ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியும் 12 வருடங்களாக இனப்பிரச்சினைக்கு யுத்தத்தின் ஊடாகவே தீர்வு காண முயன்றது என்பதனை மறந்து விடுவதற்கில்லை!

அது போலவே அதிகாரப் பரவல் தீர்வு விடயத்தில் எதிர்க்கட்சி தன்னை ஈடுபடுத்திக் கொள்ளாமல் வழுவல் நழுவல் நிலையைக் கடைப்பிடிக்கிறது; நேரத்துக்கு நேரம் முரணான கருத்துக்களை வெளியிடுகிறது.

எனவே எதிர்க்கட்சி கடைசி நேரத்தில் காலை வாரிவிடலாம் என்ற அச்சம் அரசுக்கு உண்டாகுவது இயல்பு. ஆகையால் அரசு தொடுத்துள்ள கேள்வியும் ஒரு வகையில் நியாயமானதே.

ஆனால் ஸ்ரீ. ல. சு. கட்சி எதிர்க்கட்சியாக இருந்த வேளை இனப்பிரச்சினை விவகாரத்தில் தன்னை ஈடுபடுத்தாமல் இரு நிலை தழுவி, நழுவியதையும் மறந்து விடுவதற்கில்லை!

சரித்திரம் காணாத அளவுக்கு நாடு சீரழிந்து கொண்டிருக்கும் வேளையிலும் —

தெற்கின் பிரதான அரசியல் கட்சியினர் ஒருவரை நோக்கி மற்றவர் கேள்விக் கணைகளை எறிவதும், ஒருவருக்கு அடுத்தவர் பொறி வைக்க முனைவதும் —

காலத்தை வீணாக்கி நாட்டை நாசமாக்கும் செயலன்றி வேறில்லை.

தமிழர்களை ஏமாற்றும் "சேர்ந்து விளையாடும்" சூழ்ச்சி என்றும் இதனைச் சொல்லலாம்.

இந்த அரசியல் சூதாட்டம் வேண்டாம். இது நிறுத்தப்படாதவரை நாடு படுகுழியிலிருந்து மேலே எழும்ப முடியாது.

---

### வடக்கு - கிழக்கில்

# இடம் பெயர்ந்த மக்களுக்கு மேலும் ரூ. 21 கோடி நிதி உதவி

### ஐரோப்பிய ஆணைக்குழு வழங்குகின்றது

கொழும்பு, டிச. 19

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இடம் பெயர்ந்த மக்களின் மறு வாழ்வுக்கான திட்டங்களுக்கு செலவிடுவதற்காக ஐரோப்பிய ஆணைக்குழு மேலும் 21 கோடி ரூபாவை அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்துக்கு வழங்கியுள்ளது.

ஐரோப்பிய ஆணைக்குழுவின் சமூக, மனிதாபிமான அலுவலகத்தால் வழங்கப்பட்டுள்ள இந்த உதவி இந்தியாவில் இருந்து நாடு திரும்பியவர்கள் மற்றும் சொந்த இடங்களுக்கு திரும்பமுடியாதவர்களுக்காகச் செலவிடப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடம் பெயர்ந்து போதுமான வசதிகள் இன்றி உள்ளவர்களுக்கு தற்காலிக குடிசை அமைத்தல், மீளக் குடியேறியோர் தமது வீடுகளைத் திருத்தக் கட்டடப் பொருள்கள் வழங்கல், மீளக் குடியேறியோர் சிறு கைத் தொழில்களை ஆரம்பித்தல் போன்ற பணிகளுக்கு இந்த நிதியில் இருந்து உதவக் கூடியதாகத் திட்டம் வகுக்கப்படும்.

கடந்த வருடம் இத்தகைய பணிகளுக்கு ஒதுக்கப்பட்ட 20 கோடிக்கு மேலதிகமாக தற்போது நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும் உதவி வழங்கத் தயாராக விருப்பதாக ஐரோப்பிய ஆணைக்குழு அறிவித்துள்ளது.

(உ- 3- 150)

---

## உளவாளி சுட்டுக் கொலை

கொழும்பு, டிச. 19

இலங்கை இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவுக்குத் தகவல் வழங்கி வந்த ஒருவரை விடுதலைப் புலிகள் சுட்டுக் கொன்றுள்ளதாக அரசுத் தரப்பில் அறிவிக்கப்பட்டது.

நேற்று அதிகாலை 2 மணியளவில் நிலாவெளி தபால் நிலையத்துக்கு அருகில் இவர் கொல்லப்பட்டுள்ளார்.

(உ-3)

---

## மிதிவெடியில் சிக்கியவர் மரணம்

யாழ். கல்வியங்காடு ஆனந்தபுரம்பகுதியில் கடந்த திங்கள் மாலை மிதிவெடியில் சிக்குண்டு இடது காலை முழங்காலுக்குக் கீழ் இழந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட வல்லி சின்னத்தம்பி (வயது 71) என்பவர் நேற்று முன்தினம் இரவு ஆஸ்பத்திரியில் மரணமானார்.

சீவல் தொழிலாளியான இவர் தமது தொழிலுக்குச் சென்று கொண்டிருந்த வேளை வீதியில் இருந்த வெள்ளத்திற்கு ஒதுங்கிக் கரையோரமாக நடக்க முயன்ற போது மிதிவெடியில் சிக்குண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(உ-15)

---

### மிக மோசமாக

# இலங்கையில் எய்ட்ஸ் பரவும் பேராபத்து!

கொழும்பு, டிச. 19

அடுத்த மூன்று ஆண்டுகளில் — அதாவது இரண்டாயிரமாவது ஆண்டில் — இலங்கையில் 30 ஆயிரம் பேர் எயிட்ஸ் நோய்க் கிருமியால் பீடிக்கப்பட்டிருப்பார்கள்.

"இந்த விடயத்தில் அவசர — அத்தியாவசிய — நடவடிக்கைகளை விரைந்து எடுப்பதற்கு அரசு தவறுமானால் அதன் விளைவு விபரீதமாக இருக்கும்."

இவ்வாறு பிரபல நிபுணர் ஒருவர் அரசை எச்சரித்திருக்கின்றார்.

தற்போதைய புள்ளிவிவரங்களின்படி —

நாட்டில் 'எய்ட்ஸ்' நோய் காவிகள் ஏழாயிரம் பேர் உள்ளனர். 172 பேர் எய்ட்ஸ் நோயால் முற்றாகப் பீடிக்கப்பட்டுள்ளனர்.

அதிகளவு எயிட்ஸ் நோயாளிகள் தென்னிலங்கையிலேயே உள்ளனர். விபச்சார நடவடிக்கைகள், வியாபாரங்கள் அங்குதான் மும்முரமாக நடப்பதாகக் கூறப்படுகின்றது.

எயிட்ஸ் நோயாளிகளை பரிவுடன் பராமரிக்கும் விடயத்திலும் இலங்கையில் அசிரத்தைப் போக்கும் காட்டப்படுகின்றது.

அண்மையில் காலியில் நடந்த சம்பவம் ஒன்றில் எய்ட்ஸ் நோயாளி ஒருவர் சமூகத்தில் வாழ்வது குறித்து அச்சமுற்ற சிலர் ஒன்று சேர்ந்து அந்த நோயாளியின் வீட்டை எரித்திருக்கின்றார்கள். கடுமையாகத் தாக்கப்பட்ட அந்த நோயாளி ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்குச் சேர்க்கப்பட்டார். ஆனால் ஆஸ்பத்திரியில் பணிபுரிந்தோர் அவரின் புண்களுக்கு மருந்துபோட மறுத்துவிட்டனர்.

சம்பந்தப்பட்ட எய்ட்ஸ் நோயாளியின் சகோதரர்கள் இருவரை பாடசாலைக்குக் கல்வி பயில வரவும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அந்த நிபுணர் தகவல் வெளியிட்டார்.

(உ-150)

---

# உலக உணவுத் திட்ட விதிப்படி வன்னியில் உணவு உதவி இல்லை

### அகதிகள் நிலை குறித்து அரச அதிபர்

வவுனியா, டிச. 19

உலக உணவுத்திட்ட விதிமுறைகளின்படி, வன்னிப் பகுதியில் உள்ள பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்த மக்களுக்கு இன்னமும் உணவு உதவி கிடைக்கவில்லை என்று வவுனியா அரச அதிபர் கே. கணேஷ் கூறியுள்ளார்.

வன்னி மாவட்ட உணவு நிலை குறித்து விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே அவர் இப்படிக் கூறியுள்ளார்.

உலக உணவுத்திட்ட விதிமுறைகளின்படி ஒரு மனிதனுக்கு ஒரு மாதத்துக்கு 500 ரூபா பெறுமதியான நிவாரண உணவுப் பொருள்கள் உதவியாக வழங்கப்பட வேண்டும். இந்த நியதி நாட்டின் பல பகுதிகளிலும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

ஆனால் வன்னிப் பகுதியில் உள்ள பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்துள்ள அதாவது "சூரியப் பிரகாசம்" இராணுவ நடவடிக்கைக்கு முன்னர் இடம் பெயர்ந்துள்ள 4 இலட்சத்து 29 ஆயிரத்து 204 பேருக்கும் இந்த அடிப்படையில் நிவாரண உணவு உதவிகள் வழங்கப்படவில்லை.

இப்படி அவர் மேலும் கூறினார்.

(இ-3)

---

## நாளை

**மார்கழி 5**

வெள்ளிக்கிழமை

**திதி:** ஏகாதசி

பின் இரவு 1.58 வரை.

**நட்சத்திரம்:** அச்சுவினி

முன் இரவு 6.59 வரை.

சுவர்க்க வாயில்

ஏகாதசி விரதம்

**ராகுகாலம்:** 10.54-12.24

**சுபநேரம்:** 6.24 - 7.54

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

---

# ஆங்கில மொழி வினாத்தாள்

அரசினால் நடத்தப்படும் ஜீ.சி.ஈ சாதாரண தரப் பரீட்சைக்கான ஆங்கிலத்தை (மொழி) தவிர்ந்த ஏனைய வினாத்தாள்கள் யாவும் பரீட்சார்த்திகளால் எடுத்துச் செல்லப்படக் கூடியதாக இருக்கின்றன. ஆனால் சர்வதேச மொழியான ஆங்கில வினாத்தாள் மாத்திரம், வினாத்தாளிலேயே சகல வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டியுள்ள காரணத்தினால், வெளியில் கிடைப்பதில்லை.

நேர்மையாகவும், குறிப்பிடத்தக்க ஈடுபாட்டுடனும் ஆங்கில மொழியைப் போதிக்கும் ஓர் ஆசிரியனுக்கு தனது மாணவ மாணவிகள் எவ்வண்ணம் பரீட்சைக்கு முகம் கொடுத்திருப்பார்கள் என்பதை அறியும் ஆவலைப் பூர்த்தி செய்வதற்கு வினாத்தாளின் ஒரு பிரதியை பரீட்சை முடிந்தவுடன், பெற்றுக் கொள்ள முடியாதிருப்பது ஒரு துரதிர்ஷ்டவசமான விடயமாகும்.

ஆகவே பரீட்சை முடிவடைந்த பின், வினாத்தாளின் இரகசியத் தன்மை அற்ற நிலையில்—

ஆங்கில ஆசிரியர் ஒருவர், மேற்பார்வையாளரின் கண்காணிப்பின் கீழ் இவ்வினாத்தாளைப் பிரதி செய்வதை அனுமதிப்பதையோ—

அல்லது கொழும்பு பரீட்சைத் திணைக்களத்திலுள்ள நடைமுறை போல தேவையானவர்கள் பிரதி செய்வதற்காக, இவ்வினாத்தாளின் பிரதியொன்றை உள்ளூர் கல்விப் பணிமனையில் வைப்பதையோ—

மிகவும் அக்கறையுடன் ஆராயுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை, ஆங்கிலக் கல்வியில் அக்கறையுள்ளவன் என்ற ரீதியிலும் தனிப்பட்ட ஆங்கில ஆசிரியன் என்ற வகையாலும் கேட்டுக்கொள்கிறேன்.

மு. தம்பிப்பிள்ளை

அல்வாய் வட மேற்கு,

---

# வடமராட்சி பஸ் போக்குவரத்து

அண்மையில் தீவகப்பகுதி ஆசிரியர்கள் தமது போக்குவரத்துக் கஷ்டங்கள் தொடர்பாக 'வாசகர் திருமுகம்' பகுதியில் குறிப்பிட்டிருந்தார்கள். அதுபோல எவரும் உணர்ந்திராத, வடமராட்சிப் பகுதியில் கடமையாற்றும் ஆசிரியர்கள் உள்ளிட்ட அரச ஊழியர்களின் போக்குவரத்துக் கஷ்டங்களை இம்மடல் மூலம் வெளிக்கொணர விரும்புகின்றேன்.

வடமராட்சிப் பகுதியில் உள்ள அரச நிறுவனங்கள், பாடசாலைகள் முதலியவற்றில் கடமையாற்றும் அரசாங்க ஊழியர்கள் யாழ்ப்பாணப் பகுதியில் இருந்து தினமும் கடமைக்குச் சென்று திரும்புவது பலத்த சிரமமாக உள்ளது. இதற்கு பிரதான காரணம் போக்குவரத்துச் சபையாலும், தனியார் போக்குவரத்து ஒன்றியத்தாலும் நடத்தப்படும் பஸ் சேவைகளின் நேர அட்டவணைகளாகும்.

## வாசகர் திருமுகம்

குறிப்பாக யாழ்ப்பாணப் பகுதியில் இருந்து வ.பி.போ. சபையின் முதலாவது பஸ் காலை புதிய நேரம் 8.00 மணிக்கு தனது சேவையை ஆரம்பிக்கின்றது. இப் பஸ் பருத்தித்துறைப் பகுதியை மு. ப 10.00 மணிக்குச் சென்றடைகின்றது. ஆனால் புதிய நேரப்படி அலுவலக நேரம் காலை 8.30 ஆக உள்ளது. இது இவ்வாறிருக்க இதன் பின்னரே, அதாவது காலை 8.30 மணியளவிலேயே தனியார் போக்குவரத்துச் சபையின் முதலாவது மினி பஸ் தனது சேவையை ஆரம்பிக்கின்றது.

நிலைமை இவ்வாறிருக்க, பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு காலை 8.30 மணிக்கிடையில் 3 பஸ்கள் சேவையை ஆரம்பிக்கின்றன.

மேலும், அலுவலக நேரம் புதிய நேரப்படி தற்போது பி. ப. 4.15 ஆக இருக்கும் நிலையில், பருத்தித்துறையிலிருந்து போக்கு வரத்துச் சபையின் கடைசி பஸ் புதிய நேரம் 3 மணிக்கு தனது சேவையை ஆரம்பிக்கின்றது. இதனால் அரச ஊழியர்கள் அரையும் குறையுமாக தமது அலுவல்களைப் போட்டது போட்டபடி விட்டுவிட்டு பஸ் பிடிப்பதற்காக அவதிப்பட வேண்டிய அவல நிலையுள்ளது. மேலும் தனியார் போக்குவரத்து ஒன்றியத்தின் கடைசி மினி பஸ் தனது சேவையை புதிய நேரம் 2.00 மணியளவில் பருத்தித்துறையிலிருந்து ஆரம்பிப்பதையும் இவ்விடத்தில் சுட்டிக்காட்டுதல் பொருத்தமாகும்.

எனவே யாழ்ப்பாணப் பகுதிக்கு தினமும் கடமைக்கு வரும் வடமராட்சிப் பகுதி அரச ஊழியர்களைப் போலவே, வடமராட்சிப் பகுதிக்குச் செல்லும் யாழ்ப்பாணப் பகுதி அரச ஊழியர்களின் நன்மை கருதி, உகந்த நேர அட்டவணை மாற்றத்தைச் செய்யுமாறு சம்பந்தப்பட்டவர்களை கேட்டுக் கொள்கின்றேன்.

ரி. கமலநாதன்

உயரப்புலம், ஆனைக்கோட்டை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளுடன் நிபந்தனையின்றி பேச ஸ்ரீமானியின் கட்சி வலியுறுத்துகிறது

## ஏனைய கட்சிகளிடம் ஆதரவு திரட்டுகிறது

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமெனில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நிபந்தனையின்றிப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று ஜனநாயக ஐக்கிதி தேசிய முன்னணி வலியுறுத்ய உள்ளது.

போக்குவரத்து அமைச்சர் திருமதி ஸ்ரீமானி அத்துலத்முதலி தலைமையிலான ஜ. ஐ. தே. முன்னணி (லலித் பிரிவு) இதற்கான முடிவை அண்மையில் மேற்கொண்டதாக அறியப்படுகின்றது.

தனது இந்த நிலைப்பாடு குறித்தும் அதற்கு ஆதரவு திரட்டியும் ஐ. ஐ. தே. முன்னணியின் பிரமுகர்கள், அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளுடனும், தமிழ்க் கட்சிகளுடனும் தனித்தனியாகப் பேச்சு நடத்தி வருகின்றனர்.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியை (லலித் பிரிவைச்)சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்கா, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு விடுதலைப் புலிகளுடன் பேசுவது அவசியம் என்பதனை வெளிப்படையாகக் கூறிவந்தார் என்றும் —

அதன் வளர்ச்சி நிலையே பிரஸ்தாப கட்சியின் இப்போதைய நிலைப்பாடு என்றும்— கொழும்பில் அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

# ஒன்றாக ஓய்வுபெறும் 10,000 தமிழ் ஆசிரியர்

கொழும்பு, டிச. 19

அரசாங்க ஊழியர்கள் சுயவிருப்பின் பேரில் ஓய்வுபெறுவதற்கு வழங்கிய கால அவகாசம் எதிர்வரும் திங்கட்கிழமை முடிவடையும் நிலையில், நேற்று முன்தினம் வரை 45 ஆயிரம் அரச ஊழியர்கள் ஓய்வுபெற விண்ணப்பித்துள்ளனர் என அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இவர்களில் 10 ஆயிரம் பேர் தமிழாசிரியர்கள் என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

நாட்டின் இன்றைய நெருக்கடியான சூழ்நிலையில் தமிழ் மாணவர்களின் கல்வி பரவலாக — கடுமையாக — பாதிக்கப்பட்டிருக்கின்றது. இந்நிலையில் பெருந்தொகையான தமிழ் ஆசிரியர்கள் ஓய்வுபெறுவதற்கு முண்டியடிப்பது கல்வித்துறை வட்டாரத்தில் பெரும் கவலையை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

# உரிமம் பெறாத பாமஸிகள் மீது ஜனவரி முதல் சட்ட நடவடிக்கை

யாழ்ப்பாணம், டிச. 19

1980 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க ஒப்பனைச் சாதனங்கள், உபாயங்கள், மருந்துகள் சட்டத்தின் கீழ் உரிமம் (லைசென்ஸ்) பெறாமல் மருந்து விற்பனை செய்யும் மருந்தகங்களுக்கு (பாமஸிகளுக்கு) எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் டாக்டர் வை. ஸ்ரீகாந்தா தெரிவித்திருக்கின்றார்.

இதற்கிடையில் —

நாட்டில் 27 ஆயிரம் தனியார் மருந்தகங்கள் இருக்கின்றபோதும் அவற்றில் சுமார் 2 ஆயிரம் மருந்தகங்களே சட்டப்படி இயங்குகின்றன என்று இலங்கை மருந்தாளர் (பாமஸிஸ்ட்) சங்கம் தெரிவித்துள்ளது.

மருந்தாளர்கள் இல்லாத நிலையில் பெரும்பாலான மருந்தகங்கள் இயங்குகின்றன என்றும் —

மருந்தாளர்களின் படத்தை கடையில் தொங்க விட்டு விட்டு சரியான மருந்தைக் கொடுக்காமல் பிழையான மருந்துகளைக் கொடுப்பதாகவும் —

இதையிட்டுச் சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் —

பாமஸிஸ்ட் சங்கம் தெரிவித்துள்ளது. (உ-3-150)

# காங்கிரஸ் எம். பிக்கள் ராவுக்கு எதிராக முடிவு

காங்கிரஸ் கட்சியின் ஒற்றுமையைக் கருதியும், மக்களின் நம்பிக்கையை கட்சி இழந்துவிடாமல் இருப்பதற்காகவும் பி. வி. நரசிம்மராவ் காங்கிரஸ் நாடாளுமன்றக் குழுத் தலைவர் பதவியில் இருந்து விலக வேண்டும் என்று காங்கிரஸ் நாடாளுமன்றச்செயற்குழு நேற்று ஏகமனதாகக் கேட்டுக் கொண்டுள்ளது.

நேற்றுக் காலை பத்து நிமிட நேரமே இடம்பெற்ற குழுவின் சிறப்புக் கூட்டத்தில் காங்கிரஸ் நாடாளுமன்றக் குழுத் தலைமைப் பதவியில் மாற்றம் கொண்டு வரப்பட வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. செயற்குழுவின் 24 உறுப்பினர்களும் அதில் கையெழுத்திட்டனர்.

பி. வி. நரசிம்மராவும் இக் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கையை தாம் பரிசீலிப்பதாக நரசிம்மராவ் செயற்குழு உறுப்பினர்களிடம் தெரிவித்தார்.

இதற்கிடையில் —

நேற்று மாலை புதுடில்லியில் நடைபெற்ற காங்கிரஸ் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் நரசிம்மராவ் பங்கு பற்றவில்லை. (உ-3)

# தமிழ்க் கட்சிகள் யாழ். வந்து திரும்பிய பின்பே தேர்தல் திகதி முடிவு

தமிழ்க் கட்சிகள் யாழ்ப்பாணம் சென்று வந்த பின்னர் உள்ளூராட்சித் தேர்தல்களுக்கான புதிய திகதி அறிவிக்கப்படும் என்று பொதுமக்கள் ஐக்கிய முன்னணிச் செயலாளரும், அமைச்சருமான டி. எம். ஜயரத்தின தெரிவித்தார்.

வடக்கு உள்ளூராட்சித் தேர்தல் ஒத்திவைப்பு, இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை அமுலாக்கக் கோரி ஈ.பி.டி.பி. வழக்குத் தாக்கல் செய்ய முயற்சி எடுத்துள்ளமை ஆகியன குறித்துக் கேட்கப்பட்டபோதே அவர் இப்படிக் கூறினார்.

இலங்கை- இந்திய ஒப்பந்தத்தைப் பூரணமாக நடைமுறைப்படுத்துமாறு கோரி ஈ. பி. டி. பி. வழக்குத் தாக்கல் செய்வது தொடர்பாக ஜனாதிபதியுடன் பேசிய பின்னர் முடிவு செய்யப்படும் என்றார் அவர்.

இதற்கிடையில் —

ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தக் கோரி இலங்கை — இந்திய அரசாங்கங்கள் மீது வழக்குத் தொடருவது குறித்து சிங்கள புத்திஜீவிகளுக்கும், மகாநாயக்க தேரர்களுக்கும் விளக்கமளிக்க ஈ. பி. டி. பி. முடிவு செய்திருப்பதாகத் தெரிய வருகின்றது.

இம்மாத இறுதிக்குள் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யவிருப்பதாக ஈ. பி. டி. பி. வட்டாரங்கள் தெரிவித்தன.

வழக்குத்தாக்கல் செய்வது தொடர்பாக அரசாங்கத்துடனும் பேசுவேன் என்று ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா கூறினார். (உ-3)

# 24 எம். பிமார் கூடி 'அழுத்தக்குழு' அமைப்பு

கொழும்பு, டிச. 19

இனப்பிரச்சினைக்குத் துரித தீர்வு காணும் படி அரசு மற்றும் எதிர்த்தரப்பினருக்கு அழுத்தம் கொடுப்பதற்காக 24 எம். பிக்களைக் கொண்ட 'அழுத்தக் குழு' ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

ஆளும் மற்றும் பிரதான எதிர்க்கட்சிகளையும் தமிழ்க் கட்சிகளையும் சேர்ந்த 24 எம். பிக்களே இந்தக்குழுவை அமைத்துள்ளனர்.

இனப்பிரச்சினைக்கு துரித தீர்வு காணும் வகையில் இந்தக் குழு அரசுக்கும், பிரதான எதிர்க் கட்சியான ஐ. தே. கவுக்கும் அழுத்தம் கொடுக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளது.

'இன்ரநஷனல் அலேட்' என்ற சர்வதேச அமைப்பு இந்த 24 எம். பிக்களையும் அழைத்து கூட்டம் ஒன்றை நடத்தியிருந்தது.

அண்மையில் அயர்லாந்தில் இந்த அமைப்பு நடத்திய கருத்தரங்கில் பங்கு பற்றிய 24 எம். பிக்களே அழுத்தக் குழுவாக செயற்பட விருக்கின்றனர். (உ-3)

## அடையாளம் காணப்பட்டார்

யாழ்ப்பாணம், டிச. 19

யாழ். நகரப்பகுதியில் கடந்த திங்கள் இரவு இராணுவத்தினரால் சுடப்பட்டு மரணமடைந்தவரின் சடலம் நேற்று இனம் காணப்பட்டது.

வறுத்தலைவிளானில் இருந்து இடம் பெயர்ந்து இருபாலையில் வசித்து வந்த குகதாஸன் [வயது 45] என்பவரே இச்சம்பவத்தில் உயிழுழந்தவராவார்.

சைக்கிள் விபத்து ஒன்றில் சிக்கி இடது கை முறிந்த நிலையில் கடந்த 9ஆம் திகதி யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த இவர் கடந்த ஞாயிறு இரவு ஆஸ்பத்திரி வார்ட்டில் இருந்து காணாமற்போனார் என்று கூறப்பட்டது.

இவர் ஒரு மனநோயாளி எனவும் தெரிவிக்கப்பட்டது. [உ-15]

# 'பாடும் மீன்' படை நடவடிக்கையில் ஈடுபடும் துருப்புக்கள் மீது தாக்குதல்

கொழும்பு, டிச. 19

கிழக்கு மாகாணத்தில் 'பாடும் மீன்' இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் படையினர் மீது விடுதலைப் புலிகள் பெரிய அளவில் பதில் தாக்குதல் நடத்தி வருவதாக கொழும்பில் இருந்து ஒலிபரப்பாகும் 'யெஸ். எவ். எம்.' வானொலி நேற்றிரவு தெரிவித்தது.

இத்தாக்குதலால் ஏற்பட்ட சேத விவரங்களை அது வெளியிடவில்லை.

அதே வேளை—

கிழக்கு மாகாணத்தில் படையினர் ஆரம்பித்துள்ள 'பாடும் மீன்' நடவடிக்கை தொடர்ந்து இடம்பெற்று வருவதாக அரசுத்தரப்பில் அறிவிக்கப்பட்டது.

இந்த நடவடிக்கையில் ஈடுபட்டு கொக்கட்டிச்சோலை வரை முன்னேறி, அங்கு நிலை கொண்டிருந்த படையினர் மீது நேற்று முன்தினம் இரவு விடுதலைப் புலிகள் நடத்திய மோட்டார் தாக்குதலில் ஒரு சிப்பாய் உயிரிழந்தார் என பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

'பாடும் மீன்' நடவடிக்கையில் ஒவ்வொன்றும் ஐந்நூறு முதல் அறுநூறு படையினரைக் கொண்ட நான்கு பட்டாலியன்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகத் தெரிய வந்தது.

முப்படையினரும் கூட்டாக நடத்தும் பாரிய நடவடிக்கை இது என இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் றோஹான் தளுவத்த குறிப்பிட்டார்.

கிழக்கு மாகாணத்தில் புளுக்குனாவமுகாம் போன்ற முகாம்களை பாதுகாப்பாகத் தக்க வைப்பதற்காகவே இந்த இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் கூறினார்.

இந்த இராணுவ நடவடிக்கை காரணமாக பட்டிருப்பு பாலத்தின் ஊடாக படுவான்கரைக்கு உணவுப் பொருள்களைக் கொண்டு செல்வதற்குக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

மட்டுப்படுத்தப்பட்டுள்ள அளவிலேயே உணவுப் பொருள்கள் எடுத்துச்செல்ல அனுமதிக்கப்படுகிறது. (உ-3-5-10)

### ஊரடங்கு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஊரடங்குச் சட்டம் காலை 4 மணியுடன் நீக்கப்படும் என நேற்று முன்தினம் உதயனில் வெளியான செய்தி தவறு என இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தீவுப்பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள ஊரடங்குச் சட்ட நேரங்களில் எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை என்ற தலைப்பில் யாழ். இராணுவத் தரப்பினர் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பிலேயே இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசேட அறிவித்தல் ஏதும் வெளியிடப்படும் வரை யாழ். குடாநாட்டில் பொதுவான ஊரடங்குச் சட்டம் தொடர்ந்தும் ஒரே முறையிலேயே நடைமுறையில் இருக்கும் என்பதையும் பாதுகாப்புப் பிரிவினர் அச்செய்திக் குறிப்பில் உறுதிப்படுத்தியுள்ளனர். (உ)

## ரூ. 10 ஆயிரம் அபராதம்

கொழும்பு, டிச. 19

பண்டாரவளை பதுலுபிட்டியவில் வீதிச் சோதனையில் ஈடுபட்ட பொலீஸார் ஓட்டோவில் பெருமளவு போதைவஸ்தைக் கொண்டு சென்ற ஒருவரைக் கைது செய்தனர்.

பதுளை மாஜிஸ்திரேட் முன் ஆஜர் செய்யப்பட்ட [illegible] அபராதம் விதிக்கப்பட்டது. [உ-3]

## வீதி திறப்பு

யாழ்ப்பாணம், டிச. 19

பாதுகாப்புக் காரணங்களுக்காக இதுவரை மூடப்பட்டிருந்த சுன்னாகம் கந்தரோடை வீதி மக்களின் பாவனைக்காகக் கடந்த வாரம் முதல் திறந்து விடப்பட்டுள்ளது. (உ-15)

### களுவாஞ்சிக்குடி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமது மோட்டார் சைக்கிளை மோதிக் குண்டை வெடிக்க வைத்திருக்கின்றார்.

இதே போன்ற தாக்குதல் பாணியை தலைநகரிலும் நடத்துவதற்குப் புலிகள் திட்டமிடக் கூடும் எனக் கருதப்படுவதால் கொழும்பில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருக்கின்றது. (உ-10)

### திருமலையில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தில் கடந்த 10 ஆம் திகதி ஜி. சீ. ஈ. (சாதாரண தர) பரீட்சைகள் நடைபெறாமல் போன பரீட்சை மண்டபங்களில் எதிர்வரும் 22 ஆம் திகதி அப்பாடங்களுக்கு விசேட பரீட்சை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-10)

## மரண அறிவித்தல்கள் 2 ஆம் பக்கத்தில்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால்யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19 - 12 - 1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org